Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரெண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 11 (12.07.2003) சனிக்கிழமை இதழ்: 283

## கண்காணிப்புக்குழுத் தலைவர் வன்னி விஜயம் ஒத்திவைப்பு!

(கிளிநொச்சி)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனின் வன்னி விஜயம் பிற்போடப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, கண்காணிப்புக்குழுத் தலைவர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவிருந்தார்.

எனினும்- இவரது கிளிநொச்சிக்கான விஜயம் இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை, இவரது வன்னி விஜயம் இடம்பெறும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவே அரசின் இடைக்கால நிர்வாகத் திட்டம்

### கொழும்பில் சட்டவல்லுநர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்வதற்காகவே, அரசு இடைக்கால நிர்வாகத்துக்கான திட்டவரைபைச் சமர்ப்பிக்க உள்ளதாக, கொழும்பில் சட்டவல்லுநர்கள் தெரிவித்தனர்.

இத்திட்டவரைபின்படி - விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் அளவுக்கு அதிகாரங்களைக் கொண்டதாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்ப அமைக்கப்படப் போவதில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நயினாதீவில் பொதுமக்கள் மீது கடற்படையினர் அடாவழித்தனம்!

## போராளிகளையும் சுற்றி வளைத்தனர்

(நயினாதீவு)

**நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயசூழலில் - விடுதலைப் போராட்டம் சம்பந்தமான விடியோப் படம் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது, கடற்படையினர் அடாவடித்தனம் புரிந்துள்ளனர்.**

**நேற்று இரவு - நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்போது - பொதுமக்கள் மீது கடற்படையினர் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில், பொதுமக்களில் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.**

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயச் சூழலில், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்களை மிரட்டும் வகையில் கடற்படையினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், அவர்கள் மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியில் நின்ற மூன்று போராளிகளை கடற்படையினர் சுற்றி வளைத்தபோது, அவர்கள் சயனைட் உட்கொள்ளப்போவதாக எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு கடற்படை உயரதிகாரிகள் வந்து சேர்ந்ததையடுத்து, போராளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்த நீதிமன்றால் பிணையில் விடுதலை!

உடதலவின்னவில் தேர்தல் கால படுகொலை வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரின் இரண்டு புதல்வர்களும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேல் நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைய, இவர்களுடன் மேலும் 14 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்தப் படுகொலை வழக்கில் 15 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கலாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால அலகில் தமிழ்க் குழுக்கள்; இந்திய தரப்பின் அழுத்தம் அதிகரிப்பு!

வட-கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகத்தில், ஏனைய தமிழ்க் குழுக்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று- இந்தியா, இலங்கை அரசு மீது இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது.

எதிர்காலத்தில் வட - கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகத்தில்- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி)க்கும், ஈ.பி.டி.பிக்கும் முக்கிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்று- இந்திய அரசு, இலங்கை அரசுக்கு தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்துவருவதாக, கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புலிகளின் ஆதரவாளர் புதூரில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் இளைஞன் ஒருவர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இவர், திமிலைத்தீவைச் சேர்ந்தவர் என்றும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த்ச்சம்பவம்- நேற்று பி.ப 1.15 மணியளவில் நடைபெற்றது. விபுலானந்தா வீதியூடாக மட்டக்களப்பு நகரை நோக்கி, சைக்கிளில் நண்பர் ஒருவருடன் சென்று கொண்டிருந்தபோது- துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய இவர், வேலுப்பிள்ளை பரணீதரன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டார்

புலிகளின் திமிலைதீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜ்ஜுடன் கடந்த மாதம் 6 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூஷணி இன்று இரதோற்சவம்

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூஷணியம்மன் இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. பொதுமக்கள் உற்சவத்தில் கலந்துகொள்ள வசதியாக, மேலதிக பஸ் சேவைகள் மற்றும் படகுச் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

வடபகுதிக்குள் நுழைவதற்கான சோதனை நிலைகளிலும் பெருமளவிலான பொது மக்கள் நயினாதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் வருவதற்காகக் காத்து நின்றதை நேற்று அவதானிக்க முடிந்தது.

கடந்த காலங்களைவிட இம்முறை மிகப்பெருமளவிலான மக்கள், நாகபூஷணி அம்மன் தேர்த் திருவிழாவிற்கு செல்வது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

## தொடர்ந்து அமைச்சர் பதவியில்; எஸ்.பி.திஸநாயக்க அறிவிப்பு!

### பிரதமர் சமரசம் செய்தாராம்

விவசாய அமைச்சுக்கும், நிதி அமைச்சுக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளை- பிரதமர் தீர்த்துவைத்திருப்பதாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முரண்பாடுகள் தீர்க்கப்பட்டதனால், தாம் தொடர்ந்தும் விவசாய அமைச்சராகப் பணியாற்றப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கன்னொருவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்!

சாவகச்சேரியில் ஏழுவயதுச் சிறுமியொருத்தி இளைஞன் ஒருவரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்காளானாள்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில், வீடு ஒன்றில் திருத்த வேலை செய்துகொண்டிருந்த இருபத்திரண்டு வயது இளைஞன் ஒருவன், அந்த வீட்டில் ஆட்கள் இல்லாத சமயத்தில் பக்கத்து வீட்டில் இருந்த ஏழுவயதுச் சிறுமியை அழைத்துப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளான்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிப்படைந்த சிறுமியை, உறவினர்கள்- சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். பின்னர், இந்தச் சிறுமி மேலதிக சிகிச்சைக்காகவும், பரிசோதனைக்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டார்.

## குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் அரசாங்கம் தலையிடமாட்டாதாம்!

திருமலை - குரங்குப்பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் தாம் அமைத்த முகாமை அகற்ற மறுத்துள்ள நிலையில், இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதில்லை என, அரசு முடிவெடுத்துள்ளது.

புலிகளின் முகாமை அகற்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே தலையிட்டு, புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமென, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் , ஒஸ்ரின் பெர்னாண்டோ கேட்டுள்ளார். அரசு இதில் நேரடியாகத் தலையிடமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

முகாமை அகற்றப் புலிகள் கண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# ஐஸ் தொழிற்சாலை அமைக்க அனுமதி மறுப்பு; எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல்!

## வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசம் நடவடிக்கை

(ஆழியவளை)

வடமராட்சிப் பகுதியில், ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதற்குப் படைத்தரப்பு அனுமதி வழங்காமைக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளில், வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ.குடாநாட்டிற்கான இராணுவத தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோருக்கு எதிராகவே, இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவுள்ளதாகத் தெரியவருகிறது.

(122)

# சுகாதார நாட்டுக்கூத்து!

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி, யாழ். மாநகர சுகாதாரப் பணிமனையால் நாட்டுக்கூத்து நிகழ்வு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

ஆரம்ப சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்படும் இந்த நாட்டுக்கூத்து, உள்ளூராட்சி வாரத்தின் நான்கு தினங்களில் நல்லூர் மற்றும் ஏனைய பொது இடங்களிலும் நடைபெறவுள்ளது. மக்கள் சுகாதாரத்தைப் பேணும்முறை, ஆரம்பச் சுகாதாரப் பராமரிப்புப் போன்ற சுகாதார முறைகள் பற்றி மக்களுக்கு உணர்த்தவே இந்த நாட்டுக்கூத்து நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்க வேண்டும்

## சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

இடைக்கால கட்டமைப்பு தொடர்பான அரசாங்கத்தின் யோசனைகள் அடங்கிய அறிக்கைகள் குறித்து- ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுமக கூறுகின்றார்.

எதிர்க்கட்சிகளின் சார்பாக இந்தக் கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகளின் தலைவர்களிடம் கையளிக்க முடியுமானால்- ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் அவை கண்டிப்பாக வழங்கப்படவேண்டும் என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் தெரிவித்தார்.

# பலாலியில் விபத்துக்குள்ளான அன்ரனோவ் பாவிக்கமுடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

சில மாதங்களுக்கு முன் பலாலி விமான நிலையத்தில், விபத்துக்குள்ளான அன்ரனோ -32 விமானம், மீள உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அதன் உட்பகுதிகள் பெரிதும் சேதத்துக்குள்ளாகியிருப்பதே இதற்குரிய காரணமாகும்.

இந்த விபத்துத் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெறுகின்றன. விமானம் தரையிறங்கிய சமயமே விபத்து ஏற்பட்டது. ஒரு சிறகு முறிந்திருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து விமான இயந்திரம் திடீரென நின்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இந்த விபத்தால் - குடாநாட்டில் கடமைகளில் ஈடுபடும் இராணுவத்தினரின் போக்குவரத்துக்கு உரிய வசதிகள் இல்லாமற் போயிருப்பதாகவும் கூறப்படுகின்றது.


THE ROYAL COLLEGE OF JAFFNA

**Spoken English with Grammar**

N.Vigneswaran Archery,
Black Road, Chankanai
426, (302) K.K.S. Road
Jaffna. (சி-1157)


## சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

றோணியோ இயந்திரம் Super Fax 350 மொடல் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:R.மருதம், 66, மணிககூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (சி-1233)

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், மீரா ஜஸ்மின் நடித்த

புதிய கீதை



காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE LORD OF THE RINGS

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்



பிரியமான தோழி...

10.30, 2.30,
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)
இயக்கம்: விக்ரமன்



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் அன்னதானம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் அம்பாளைத் தரிசிக்க வரும் பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு சென்ற 44 ஆண்டுகளாக "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மண்டபத்தில் இரவு பகலாக அன்னமளித்துப் பசிப்பிணி தீர்க்கும் ஒரேயொரு நிலையமாக விளங்குவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை. எமது சபையின் சிறந்த அன்னதானப் பணிக்கு ஆண்டுதோறும் பணம், பொருள் உதவி ஊக்கமளித்துவரும் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். அடியார்களின் அல்லல்தீர்க்கத் தேரேறி வரும் அன்னை நாகபூஷணி நாட்டில் சாந்தியையும், நித்திய சமாதானத்தையும் ஏற்படுத்தி நல்லருள் புரிவாளாக.

*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர்.*

(சி-1231)



## யாழ்.மண்ணில் முழுமையான டிஜிற்றல் அலைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கிக்கொண்டிருக்கும் DIGITAL MEDIA NETWORK பெருமையுடன் வழங்கும்



# குட்டி மேதைகள்



**நம் தேசத்துக் குட்டி மேதைகளை தரணியெங்கும் ஒளியலைகளில் பரவவிடும் தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சி**

குட்டி மேதைகள் நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 'நமது ஈழநாடு' 'இளந்தேனிக்கள்' கழக அங்கத்தவர்களும், ஏனைய சிறார்களும் இன்று காலை 10 மணிக்கு நிகழ்ச்சி ஒத்திகைக்காகவும், நாளை ஞாயிறு காலை 11 மணிக்கு ஒளிப்பதிவுக்காகவும் வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எதிர்வரும் மாதங்களில் நடைபெறவிருக்கும் குட்டிமேதைகள் நிகழ்வில் கலந்துகொள்ளும் ஆர்வமுள்ள அனைத்துச் சிறார்களும் இத்தினங்களில் வருகை தரலாம்.



**நிகழ்ச்சி தினம் : 13 ஜூலை 2003 (ஞாயிறு) மாலை 2 மணி.**
**இடம் : வேம்படி மகளிர் கல்லூரி**



குட்டித் தம்பி தங்கைகளே!

உங்கள் ஆற்றல் ஆளுமையை வளர்ப்பதற்காகவும், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உங்கள் சொந்தங்கள் உங்கள் திறமைகளைப் பார்த்து இரசிப்பதற்கும், TTN தொலைக்காட்சி உங்களை அறிமுகம் செய்துவைக்கவுள்ளது. நீங்கள் பங்குபற்றி உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வழிசெய்யும் நிகழ்ச்சி ஒன்றை மாதந்தோறும் நாம் நிகழ்த்துகின்றோம்.

உங்கள் பெயர், வயது, முகவரி, கல்வி கற்கும் பாடசாலை என்பவற்றை எமது முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவையுங்கள்.

எமது முகவரி :- Digital media Network,
231, கோவில் வீதி,
நல்லூர்.
தொலைபேசி: 222 3919

நிகழ்ச்சி ஆதரவு

Annai Nagaa Food City
For all your daily needs

THAMPI
Now Links With
LLIONAIR
Lanka's pride in the sky

நாடெங்கும்
மேசைத் தொலைபேசி
விநியோகஸ்தர்
பவர் செலூலர் ரேடிங் கம்பனி

ஊடக அனுசரணை:
நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்!

## ஜனாதிபதியின் சார்பில் ஹரீம் பீரிஸ் கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கொடுப்பது, நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால், ஆகக் குறைந்தது அமைச்சரவையிலாவது இதனைச் சமர்ப்பித்து, அதன் அங்கீகாரம் பெறவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாக - அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பான அரசாங்கத்தின் திட்ட வரைபு குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அதில், அரசின் இடைக்கால நிர்வாக யோசனைகள் நாடாளுமன்றத்தினாலும், மக்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் - ஆயுதங்களைக் கைவிடாமல், அவர்களிடம் அரசியல் அதிகாரத்தைக் கொடுப்பது ஆபத்தானது.

இது குறித்து அரசாங்கம் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்தாலோசனை செய்திருக்க வேண்டும். ஆனால், அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக யோசனை குறித்து ஜனாதிபதிக்கு எதுவுமே தெரியாது,

இவ்வாறு - இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் கையளிக்கப்படுவது, நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால், ஆகக்குறைந்தது அமைச்சரவையிலாவது அதைச் சமர்ப்பித்து அங்கீகரிக்கவேண்டும்.

இரண்டு அமைச்சர்கள் மட்டும் இணைந்து தீர்வு யோசனைகளைத் தயாரித்தால் போதாது. அனைத்துத் தரப்பினதும் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாக, ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## நாடும் நடப்பும்




நன்றி - யாழ். இணையம்

# பொலிஸாரின் சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்!

(கொழும்பு)

கொழும்பு நகரம் உட்பட, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதுவரை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதால் பலர் கைதாகியுள்ளனர். மேலும் பெருமளவு சட்டவிரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் பாதாள உலகைச் சேர்ந்தவர்களும், பாரிய குற்றங்களில் சம்பந்தப்பட்டோரும் அடங்குகின்றனர். இந்தத் தேடுதல்கள் வெற்றிகரமான பெறுபேறுகளைத் தந்திருப்பதால், தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிப்பதாகப் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா மேலும் தெரிவித்தார்.

# புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க எதிர்க்கட்சிகளுக்கும் நிர்வாகத்தில் பங்கு

## அரசு புதிய திட்டம் முன்வைப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க, அரசாங்கம் முயற்சி செய்வதாக நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கென நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் பங்களிப்பைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பதின்நானகு நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நிர்வாகச் செயற்பாடுகளில் பங்கேற்க வழிவகை செய்யப்படவுள்ளது. இந்தக் கண்காணிப்புக் குழுக்களுக்கு - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைமையேற்கவுள்ளனர்.

நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதற்கு, நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்படும். இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம்பெறத் தேவையில்லை என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அபாயத்தின்போது - அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டதைப்போல, நாட்டின் ஏனைய பிரச்சினைகளிலும் அனைத்துக்கட்சிகளும் இணைந்து செயற்படத்தக்க வகையிலேயே, இந்த நாடாளுமன்றக் கண்காணிப்புக்குழுக்கள் அமைகக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# விரைவில் இலங்கையிலும் 24 மணிநேர தொலைக்காட்சி!

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் விரைவில் இருபத்துநான்கு மணிநேரத் தொலைக்காட்சி சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையில் முதற்தடவையாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இருபத்து நான்கு மணிநேர தொலைக்காட்சி சேவையில் - விளையாட்டு, நாடகம், திரைப்படங்கள், செய்திகள் என்பன ஒளிபரப்பப்படவுள்ளன.

மும்மொழிகளிலும் ஒளிபரப்பு நிகழவுள்ள இந்தத் தொலைக்காட்சிச் சேவையில், முறைசாராக் கல்வி நிகழ்ச்சிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு மணித்தியாலம் கொண்டதாக நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மணித்தியாலத்தின் 12 ஆவது நிமிடத்திலிருந்து மூன்று நிமிடங்கள் விளம்பரத்துக்காக ஒதுக்கப்படும்.

புதிய அலைவரிசை, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றும் நோக்குடையதாக அமையுமென்று - ரூபவாஹினி கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

# இடைக்கால நிர்வாக யோசனை; பிரதமர் - வெஸ்பேர்க் ஆராய்வு!

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக, அரசாங்கத்தின் யோசனைகள் குறித்து நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுக்களை நடத்திவருகின்றார்.

விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிப்பதற்காக அரசாங்கம் இடைக்கால நிர்வாக யோசனைகளைத் தயாரித்து வருகின்றது. இந்த யோசனைகளில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்தே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வெஸ்பேர்க் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்தி வருவதாகப் பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தவாரம் வன்னிக்குச் சென்று, புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்கள் குறித்தும் அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விளக்கிக் கூறினார்.

அத்துடன் - இடைக்கால நிர்வாகம் தொடர்பான, புலிகளின் கருத்துத் தொடர்பாகவும், அவர்களின் எதிர்பார்ப்புத் தொடர்பாகவும் அரசதரப்பிடம் வெஸபேர்க் விளக்கியுள்ளார்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் இவர் சந்தித்துப் பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### நாடக நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக் குழவினரால் நாளை நடத்தப்படவிருந்த நாடக நிகழ்வு-தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அரங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# வாழ்க்கைச் செலவு சுட்டெண்; சம்பள உயர்விற்கு கவனத்தில்!

## பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில், அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில், வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணையும் கவனத்தில் கொண்டே சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணையும் கவனத்தில் கொண்டு, அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதற்கென அரசாங்கத்துக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# உரிய சம்பளம், வசதியின்மையே படையினர் தப்பியோடக் காரணம்!

## முப்படைத் தளபதிகளினதும் விசாரணையில் முடிவு

(கொழும்பு)

முப்படைகளையும் சேர்ந்த படையினர் தப்பியோடுவதற்கு - உரிய சம்பளங்கள் வழங்கப்படாததும், போதிய வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படாததுமே காரணமென்று முப்படைத் தளபதிகளும் நடத்திய விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருக்கிறது.

படையினர் தப்பிச்செல்வது குறித்து - முப்படைத் தளபதிகளும் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான இறுதிமுடிவு, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இதன்போது, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல -

போதிய வசதிகளில்லாததாலேயே இராணுவத்தைவிட்டுப் படையினர் தப்பியோடுகின்றநிலையில், புதிதாக ஆட்களைத் திரட்டிப் படைகளைப் பலப்படுத்துவது சிரமமான காரியம் என்று தெரிவித்தார்.

இந்த விடயத்தைப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - முப்படைத் தளபதிகளிடமும் உறுதியளித்தார்.

### 'செவ்வரளிப் பூக்கள்' வெளியீட்டுவிழா

'புலிகளின் குரல்' வெளியீட்டுப் பிரிவின் ஏற்பாட்டில், ந.கிருஷ்ண சிங்கத்தின் 'செவ்வரளிப்பூக்கள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் -

கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

மதிப்பீட்டுரையை வெளிச்சம் ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்துவார்.

# நாடாளுமன்ற விவாதங்கள் நேரடி ஒலி, ஒளிபரப்புக்கு ஏற்பாடு

## அனைத்துக் கட்சிகளுடன் பேசவிருப்பதாக சபாநாயகர் தெரிவிப்பு

நாடாளுமன்ற விவாதங்களை நேரடியாக ஒலிபரப்புச் செய்யவும், ஒளிபரப்புச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாடாளுமன்ற விவாதங்களை நேரடியாக வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் - ஒலி, ஒளிபரப்புச் செய்வதற்குச் சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இதனாலேயே விவாதங்களை ஒலி, ஒளிபரப்புச் செய்வதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால், அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தி - நாடாளுமன்ற விவாதங்களை நேரடியாக ஒலி, ஒளிபரப்புச் செய்வதற்கான இணக்கத்தைப் பெறப்போவதாகச் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# உயர்பாதுகாப்பு வலயத்தில் கடைகள் உடைத்துத் திருட்டு!

## மாவை கந்தன் ஆலயத்தில் நடந்த சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இரு கடைகள், நேற்றுமுன்தினம் இரவு உடைத்துத் திருடப்பட்டுள்ளன.

இதுகுறித்து, மேலும் தெரிய வருவதாவது,

படையினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பகுதியில் அமைந்திருந்த கடைகளே, நேற்றுமுன்தினமிரவு உடைத்துத் திருடப்பட்டுள்ளன.

இந்தக் கடைகளில் ஒன்று, தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினாலும், மற்றையது, ஆலய நிர்வாகத்தினாலும் அமைக்கப்பட்டிருந்தன. ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இந்தக் கடைகள் அமைக்கப்பட்டிருந்தது.

படையினரின் உயர்பாதுகாப்பு வலயமாகையால், இந்தப் பகுதியில் பொதுமக்கள் எவரும் இரவில் நடமாட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக, நேற்று பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து பொலிஸார் மேற்படி கடைகளில் இருந்த பொருட்களின் பட்டியலைக் கோரியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து, பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மூதறிஞர் கந்த முருகேசனாரின் 38 ஆவது சிரார்த்ததினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் - கரவெட்டி பிரதேச செயலர் வீ.வீரபத்திரபிள்ளை, கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (17)

# இரத்தினபுரி மாவட்டத்தில் மீண்டும் வெள்ள அபாயம்!

இரத்தினபுரி மாவட்டத்தில், மீண்டும் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டிருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் பெய்த கடும்மழையால், களுகங்கையின் நீர்மட்டம் 19 அடிகளாக உயர்ந்திருப்பதாக, அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நீர்மட்டம் 23 அடியாக உயர்ந்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - இரத்தினபுரியின் சில பகுதிகளில், நேற்றுமுன்தினம் பெய்த மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீதிகளில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனால், வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ள இடங்களை விட்டுப் பெருமளவிலான பொதுமக்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். மேலும், பெருமளவு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தயாராகி விட்டதாகவும் தெரியவருகிறது.

# மக்கள் மீளக்குடியமர கிளிநொச்சியை மீட்ட போராளிகளுக்கு நன்றி கூறுவது கடமை!

## மருத்துவமனைத் திறப்பு விழாவில் இளங்குமரன் உரை

"கிளிநொச்சி நகரை மக்கள் குடியமரக்கூடிய அளவுக்கு போர்ச்சூழலில் இருந்து மீட்டுத்தந்த போராளிகளையும், மாவீரர்களையும் நாம் வாழ்த்தி வணங்குவதோடு, அவர்களுக்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் விலைமதிப்பற்ற உழைப்பினால்தான் நாம் இந்த மண்ணுக்கு மீண்டும் வந்துள்ளோம்."

- இவ்வாறு கிளிநொச்சி மருத்துவமனைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிளிநொச்சி நகரில் முன்னர் இயங்கிவந்த இந்த மருத்துவமனையை, இன்று மீண்டும் திறப்பது கிளிநொச்சி நகரை புதுப்பொலிவு பெறச்செய்கின்ற ஒரு நிகழ்வாக அமைவதோடு, ஒரு மகிழ்வான நிகழவுமாகும்.

இதேயிடத்தில் இயங்கிவந்த இந்த மருத்துவமனை, அரச படைகளால் தாக்கி அழிக்கப்பட்ட நிலையில், பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்த மருத்துவமனை உபகரணங்களையும், நோயாளர்களையும் வேறு இடங்களுக்கு நகர்த்திச் சென்று, மிகவும் குறைந்த வளங்களுடன் மிகவும் நீண்டகாலம் அக்கராயன் பகுதியில் மருத்துவ சேவையைச் செய்து வந்தது.

இந்த மண்ணை மீட்பதற்கு எத்தகைய போராட்டங்கள் நடைபெற்றதோ, அதேபோல இந்த மருத்துவனையை இங்கு மீண்டும் அமைப்பதற்கு உதவிய சகலரையும் நாம் பாராட்டுகின்றோம் என்றார் இளங்குமரன்.

# 16 வயது பாடசாலை மாணவருக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்!

பதினாறு வயது நிரம்பிய மாணவர்களுக்கு, தேசிய அடையாள அட்டைகளைப் பாடசாலைகள் மூலம் விநியோகிப்பதற்கான திட்டத்தை ஆட்பதிவுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பரீட்சார்த்தரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்தத் திட்டம், முதலாவதாக மேல் மாகாணத்தில் அமுல் செய்யப்படவுள்ளது.

பாடசாலை மாணவர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நெருங்கும் வரை காத்திராமல், முன்கூட்டியே அவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் வகையிலேயே ஆட்பதிவுத் திணைக்களம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : ர.கிருபாகரன்
முகவரி : கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை



நான்காவது அகவையில்



பெயர் : க.கபில்ராஜ்
முகவரி : எக்கட்டியான், கரவெட்டி கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றார் ஒப்ப..

# சின்னஞ்சிறு செய்திகள்

### மீண்டும் ஆயுர்வேத வைத்தியசாலை

கடந்த நான்கு மாதங்களாக பூட்டப்பட்டிருந்த, வலி.தெற்குப் பிரதேச சபையின் புன்னாலைக்கட்டுவன் ஆயுர்வேத வைத்தியசாலை மீண்டும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீளத் திறக்கப்பட்டு, வைத்திய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (101)

### சங்கிலி அறுத்தவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம் பெருமாள் கோயில கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு பெருமளவான பக்தர்கள் திரண்டிருந்த வேளை, பெண்மணி ஒருவரின கழுத்திலிருந்த சங்கிலியை அருகிலிருந்த வேறொரு பெண்மணி அறுத்து- தனது மகளிடம் கொடுத்ததை அவதானித்த அருகிலிருந்த பக்தர்கள், உடனடியாக அப்பெண்மணியை மடக்கிப் பிடித்தனர். அவரது மகளை, அறுக்கப்பட்ட சங்கிலியுடன் யாழ். இந்துக் கல்லூரி வீதியில் வைத்துப் பிடித்த பொதுமக்கள், சம்பந்தப்பட்ட இருவரையும் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

### ஆன்மீக கருத்தரங்கு

யாழ்ப்பாண பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம், நடாத்தும் "வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு" எனும் விடயம் சார்ந்த மாதாந்தக் கருத்தரங்கு- நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், மந்திகை வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை, டொக்டர் ஆர்.சிவசங்கர், கலாதேவி சிவயோகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

### எழுதுவினைஞர்கள் இடமாற்றம்

யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு, மேலதிகமாக மூன்று எழுதுவினைஞர்கள் யாழ்.அரச அதிபரால் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் போதியளவு எழுதுநர்கள் இல்லாமையால், திணைக்களப் பணிகளில் காலதாமதங்கள் ஏற்பட்டு வந்தன. இதனால், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திலிருந்து இருவரும், வேலணை பிரதேச செயலகத்திலிருந்து ஒருவரும் இடமாற்றப்பட்டுள்ளனர். செல்வி என்.செல்லையா, திருமதி மத்தியூஸ், திருமதி ஆர். ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரே இடமாற்றம் பெற்றவர்களாவர். (24)

### கார்த்திகேசனின் நினைவுநூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

எம்.கார்த்திகேசனின் நினைவுநூல் அறிமுகவிழா, நாளை மாலை 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சிறிக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வல், நூல் அறிமுகத்தினை முன்னாள் வட - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் கந்தசாமி நிகழ்த்த, கருத்துரையினை இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் தியாகலிங்கம் வழங்குவார்.

இந்த நிகழ்வில்- ஜி.சி.எஸ்.யுவின யாழ்.கிளைத்தலைவர் தவராசா, சி.மார்க்கண்டன், யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ராஜேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மீனவர் பிரச்சினை பற்றி செஞ்சிலுவை ஆராய்வு

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் பற்றி, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மீனவர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆராய்ந்துள்ளது.

நீண்ட காலமாக மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பாஸ் நடைமுறை, கடல்வலயச் சட்டங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். இது தொடர்பான பூரண தகவல்கள் திரட்டப்பட்டபின்னர், சம்பந்தப்பட்ட கடற்படை மற்றும் இராணுவ உயரதிகாரிகளையும் செஞ்சிலுவை அதிகாரிகள் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

### பதவிப் பெயர் மாற்றம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த "மாகாண முகாமையாளர்" எனும் பதவிப்பெயர், "மாகாண பிரதிப் பணிப்பாளர்" எனவும், "மாவட்ட முகாமையாளர் எனும் பதவிப் பெயர், "மாவட்ட உதவிப் பணிப்பாளர்" எனவும் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் சீ.களுப்பகனகே அறிவித்துள்ளார்.

### குருநகரில் திருவிழா

(குருநகர்)

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்திருவிழா, எதிர்வரும் புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

நற்கருணை விழா வழிபாடுகள் செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி புதன்கிழமை காலை 6.45 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

# இணைய ஈ - இன்பம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

இணையத்தளத்தில் ஈ-மெயில் அனுப்புகின்ற வசதி மிக அலாதியான ஒரு வாய்ப்பு. கடித உறை, முத்திரை, பிரயாணம் என்று எந்த ஒரு தேவையுமின்றி, மென்வலையில் மௌனமாக 'எப்படிச் சுகம்' என்று ரைப்செய்துவிட்டு, ஒரு தட்டுத் தட்டிவிட்டால், மறு நிமிடம், பெறுநர் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, உடனடியாகப் பதிலும் அனுப்பி விடலாம்.

ஈ - மெயில் வசதி மிகச் சிறப்பானது. இப்போதெல்லாம், இலவசமாக ஈ - மெயில் முகவரிகளைத் தனியார் நிறுவனங்களிலிருந்து, இணையத்தளங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம். ஹொற்மெயில் (hotmail), யாகூ (yahoo), மெய்ல் (mail), கனடா (canada) போன்றவையெல்லாம் பிரபலமான இலவச ஈ-மெயில் தளங்கள். இன்னும் ஏராளமான தளங்கள் இலவச ஈ - மெயிலை வழங்குகின்றன. இங்கே இவற்றைப் பெற்றுக்கொண்டு, அதனூடாக, இலவசமாகவே நாம் மெயில்களை அனுப்பலாம். அவுட்லுக் (outlook) என்னும் ஓர் மென் உபகரணம் தற்போது மிகப் பிரபலம். இதனூடாக இணையத்தில் கடிதம் அனுப்பும் விடயத்தில் பல அநுகூலங்களைப் பெறலாம். பலரின் ஈ - மெயில் முகவரிகளைச் சேகரிப்பிலிருந்து, அனுப்பும் கடிதங்களை பல வகையறாக்களாக, குழுக்களாகப் பிரித்து சேமிப்பது, புதிய ஈ - மெயில் வந்ததும் உடனே எமக்கு செய்தி தருவது, எழுத்துப் பிழைகளைத் திருத்துவது, அனுப்பியதில் தவறு என்று தெரிந்தால் உடனேயே மீளப் பெற்றுக்கொள்வதுவரை எத்தனையோ வசதிகள் உண்டு.

தமிழ் வார்த்தைகளையே அப்படியே ஆங்கிலத்தில் ரைப் செய்து அனுப்புவது இப்போது ஈ - மெயில் உலகில் பிரபலமாகி வருகிறது. உதாரணமாக, **amma kaditham pottaavaa? Nalamaha irukkireerkalaa?** என்றெல்லாம்கூட ஈ - மெயில் அனுப்பி சுகநலன்களைத் தெரிந்துகொள்ளலாம். வாசித்ததும் அழித்துவிட்டால், எவரும் இந்தத் தகவல்களையும் அறிந்துகொள்ள எந்த வாய்ப்பும் இல்லை. அதனால் நண்பர்களுடன் உற்சாகமாகவே உரையாடலாம்.

இணையத்தளம் உண்மையில் ஒரு இனிய தோழன். நாம் எவ்வளவு நேரம் உறவாடினாலும், இந்தத் தோழனுக்குச் சலிப்பு வராது, கோபம் வராது, உற்சாகம் குறையாது, ஏன், தோழமையுணர்விலும் மாற்றமே இராது. எதைக் கேட்டாலும் அந்த விநாடியே துள்ளிக்கொண்டு அத்தனை பதில்களையும் அள்ளிவரும் ஒரு தோழன் கிடைப்பானா என்றால் அதற்கு இணையத்தளம் என்ற ஒன்றை மட்டுமே பதிலாகக் கொடுக்க முடியும்.

இந்த விஞ்ஞான வளர்ச்சியை, விந்தையை, புதுமைகளை, அதன் வரைவிலக்கணங்களை, காரண காரியங்களை அறிந்துகொண்டு, அதன் பயனை முழுமையாக அனுபவிக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

தமிழர்களாகிய எம்மிடையே மிகப் பரவலாக வழக்கத்திலிருக்கும் "பின்னர் பார்ப்போம், பிறகு பார்ப்போம், யோசிப்போம், இப்ப என்ன அவசரம், இந்த வயதில் இது தேவையா, பிள்ளை தோளுக்கு மேல நிற்குது - அடுத்தவன் சிரிப்பான், நாலுபேர் என்ன சொல்லுவினம்" என்ற வேத வாக்குகளெல்லாம் தவிடுபொடியாகப்படவேண்டியவை. இப்படிச் சொல்பவர்களில் பலர்கூட, அனைத்து விஞ்ஞான வளர்ச்சிகளையும் வீட்டிற்குள்ளே ஒழித்திருந்து அனுபவித்து வருபவர்கள் தான்.

அதனால், அடுத்தவர் பேச்சைக் கேட்காமல், நாமே முயன்று இவற்றை அறிந்து வளர்த்துக்கொள்ளவேண்டும். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்ற காலம் போய், நேரம்கூட இப்போதெல்லாம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்றாகிவிட்டது உலகம்.

இப்படியான விடயங்களைப் பற்றிப் பேசும்போது, உடனடியாக நாம் சிந்திப்பது இதன் பணச் செலவைப்பற்றித்தான். இப்போதெல்லாம் வீட்டு தேவைக்கான கணினியின் (அனைத்தும் உள்ளடக்கம்) விலை மிகவும் குறைந்து விட்டது. புதியவைகளை, எண்பதாயிரம் ரூபாவுக்குள் வாங்கிவிடலாம். இந்தத் தொகை அதிகம் அல்லது சேகரிப்பில் இல்லை என்று தோன்றினால், கிட்டத்தட்ட முப்பதாயிரம் ரூபாவுக்கு பாவித்த (ஆனால் நல்ல நிலையிலுள்ள) கணினியை வாங்கி, அதிலே அனைத்துப் பயன்பாட்டையும் பழகிக்கொண்டு, பின்னர் தேவையையும் சேமிப்பையும் குறித்து கணினியின் தரத்தைச் சீர்செய்து கொள்ளலாம்.

கணினி வைத்திருப்பது அவசியம் என்பதேயொழிய, புதிய உயர்தர கணினி வைத்து, தரத்தை முந்துகின்ற வெற்றி உண்மையில் அவசியமற்றது. இது எங்களைக் கடன் தொல்லைகளுக்கும் தள்ளிவிடலாம். அதனால், எங்கள் தேவைக்காக மட்டும் இவற்றைப் பெற்று, தினமும் குறைந்தது அரைமணி அல்லது ஒருமணி நேரத்தை இதற்கென்றே ஒதுக்கி, நாமாகவே பலவற்றைக் கற்றுக்கொண்டுவிட முடியும்.

இக் கணினியைப் பெற்றுக்கொள்ளும் முகவரிமே, கணினியின் இயக்கம், அடிப்படைப் பாவனை, மென்வலைக்குச் செல்லும் வழி, திரும்பவும் வெளியே வந்து கணினியை அணைத்து விடுவதுவரை கேட்டுத் தெரிந்துகொண்டு பெற்று வந்தால், மீதியை நாங்களாகவே கற்றுக் கொள்ளலாம்.

**My Car, My Road, My Petrol** (எனது கார், எனது வீதி, எனது எரிபொருள்) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதாவது, நாங்கள் தன்னம்பிக்கையுடன் முயலவேண்டும் என்பதைத்தான் சொன்னார்கள். 'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சியுடையான் இகழ்ச்சியடையான்' என்ற இன்னும் ஏராளமான பழமொழிகளும் இதைத்தான் சொல்லுகின்றன.

இவற்றைப் படித்துவிட்டு, எப்போதும்போல், ஒரு பெருமூச்சு விட்டு, "சா.." இதைக்கூடத் தவறவிட்டுவிட்டேனே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், "அட..." இப்போது அறிந்து கொண்டோமே என்று மகிழ்ந்து, உடனே ஆவனவற்றைச் செய்தால்,




இனிவரும் காலம் ஈ - இன்பமாக மாறிவிடும். மறந்துவிடாதீர்கள். உங்கள் பிள்ளைகள் வளர்ந்து, சிறகு முளைத்துப் பறந்து விட்டார்கள். உங்களை 'முதியவர்கள்' என்று சொல்லாமல் சொல்கிறார்கள் என்றால், கவலை வேண்டாம். உடனே நீங்களாக, ஒரு பாவித்த கணினியைப் பெற்று, அதனை உங்கள் நண்பராக்கிக் கொள்ளுங்கள். அங்கே உங்களுக்குப் புதிய குழந்தைகள், பேரக்குழந்தைகள், பூட்டக் குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள், இணைந்து பல்லாங்குழி ஆட விளைத்த உறவுகள் என்று அனைவரும் கூடிக் காத்திருக்கிறார்கள்.

காலையில் சமய சம்பந்தமாக உரையாட வேண்டுமா? இருக்கவே இருக்கிறது தளங்கள். இந்து சமயத்தின் ஆழ அகலங்களை மிக விலாவாரியாகப் பேசி, கருத்துப் பரிமாற்றும் செய்கிறார்கள் அவற்றில்.

(தொடரும்...)

குயின்ரஸ் துரைசிங்கம்

இங்கே மடிக்கவும்



# பழமரமும் பச்சைக் கிளியும்...

ஒரு காட்டிலே - அத்திப்பழ மரத்தோட்டம் ஒன்று இருந்தது. பச்சைக் கிளிகள் அந்தப் பழங்களைத் தின்று வாழ்ந்து வந்தன. பழங்கள் கனியும் பருவம் ஓய்ந்ததும் கிளிகள் வேறு இடம் தேடிச் செல்லும்.

ஆனால், அப்பச்சைக் கிளிகளின் அரசன் - ஒரு பழமையான மரத்தில் வெகுகாலமாக வாழ்ந்து வந்தது.

அந்த கிளியரசனின் நன்றியுணர்வு, அங்கு வசித்துவந்த வன தேவதைக்கும் மிகவும் மகிழ்ச்சியூட்டியது. அத் தேவதை, கிளியரசனின் திடபுத்தியைச் சோதிக்க நினைத்து, அம்மரத்தைக் காய்ந்துபோகச் செய்தது.

அப்போதும் அந்தப் பச்சைக்கிளி அம்மரத்தை விட்டு அகலவில்லை. துளைகளிலிருந்து உதிரும் மரப்பொடியைத் தின்று, ஆற்று நீரைப் பருகி, முன்போலவே மகிழ்ச்சியாக இருந்தது. வேறு எங்கும் செல்லாமல் மரத்தின் உச்சிக் கிளையில் வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து வாழ்ந்து வந்தது.

மரத்தின் மேல் பற்றுக்கொண்ட கிளியரசனின் பரிவையும், நன்றியையும் நன்கு அறிந்துகொண்ட வன தேவதை, அதற்கு ஒரு வரம்கொடுக்க எண்ணியது.

பின் ஓர் அன்னப் பறவை உருவெடுத்து வந்து கிளியரசனைப் பார்த்து,

"நண்பா...! உதிர்ந்து பட்டுப்போன மரத்தில் பறவைகள் இருப்பதில்லை. நீ மட்டும் ஏன் இங்கிருக்கிறாய்? பழங்கள் நிறைந்த வேறு மரங்களை நாடிச் செல்லலாமே?" என்றது.



இதைக் கேட்ட கிளியரசன் "அன்னமே! நன்றி மறப்பது நல்லதல்ல. என் இளமைக்காலம் முதல் இம்மரம் என் நண்பன். இதில் பழம் பழுத்துக் குலுங்கியபோது அதைத் தின்று எவ்வாறு மகிழ்ந்திருந்தேனோ, அப்படியே அதன் முதுமையால் இயலாமைக் காலத்திலும் அதில் அற்ப சொற்ப உணவு கிடைத்தாலும் அதைக் கொண்டு திருப்தியடைவேன்" என்றது.

அன்னம்- கிளியரசனின் நட்புணர்வையும், நன்றியுணர்வையும் பாராட்டி - 'என்ன வரம் வேண்டும் கேள்' என்றது.

'இம்மரத்திற்கு வாழ்வைக் கொடு, உயிர்த்தெழச்செய்' என்று கிளியரசன் கேட்க.... வரம் தந்தது அன்னமாக வந்த தேவதை.

அம்மரம் பச்சைப்பசேல் என்று துளிர்விட்டது. கொத்துக் கொத்தாகப் பழங்களும் காய்த்துத் தொங்கின.

ஒரு நாள் இந்தப் பச்சைக்கிளி - வேறு மரம் தேடிச் சென்ற கிளிகளில் ஒன்றைப் பார்த்து, "பார்த்தாயா... உங்கள் முட்டாள்த்தனத்தாலும், அறியாமையாலும் நீங்கள் பிறந்த இடத்தை மறந்து, நன்றி கெட்டு வேறிடம் போனீர்களே! இப்போது இம்மரத்தைப் பாருங்கள். அது தன் கிளைக் கரங்களால் உங்களை 'வருக வருக' என அழைப்பதைக் கண்டு வாழ்த்துங்கள்'' என்றது.



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## அமெரிக்கா

வாரம் தோறும் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் இந்த வாரம் இடம்பெறுவது அமெரிக்கா. உலகின் மிகப் பெரிய வல்லரசான அமெரிக்கா தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| **தலைநகரம்** | - | **வொஷிங்ரன்** |
| **பரப்பளவு** | - | **93 லட்சத்து 72 ஆயிரத்து 614 ச.கி.மீ** |
| **மொழி** | - | **ஆங்கிலம்** |
| **எழுத்தறிவு** | - | **99%** |
| **சமயம்** | - | **கிறிஸ்தவம்** |
| **நாணயம்** | - | **டொலர்** |

### வரலாறு

வட அமெரிக்காவிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் (**United States of America - USA**) - 17 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் கொலனிகளிலிருந்து உருவானது. 13 மாநிலங்கள் 1776 இல் சுதந்திரப்பிரகடனம் செய்தன. 1787 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி ஆட்சி நடைபெறுகிறது.



அமெரிக்க ஜனாதிபதி புஷ்

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியே, நாட்டின் தலைவர். குறைந்தது 14 வருடங்கள் அமெரிக்காவில் வசித்து வந்த ஒருவரே ஜனாதிபதியாகப் போட்டியிடலாம். ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமுடியாது.

பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்று இரு நாடாளுமன்ற சபைகள் உள்ளன. நாட்டிலுள்ள 50 மாநிலங்களும் தனித்தனியான ஆட்சியாளர்களால் ஆளப்படுகின்றன.




. இராணுவம், வெளிநாட்டு உறவு, வர்த்தகம், மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம், தபால், நாணயம் போன்றவை மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

**பொருளாதாரம்**

விவசாய உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தானிய வகைகள், ஓர்ஸ், பார்லி, கோதுமை, அரிசி, சோயா, பீன்ஸ், உருளைக்கிழங்கு போன்றன முக்கிய விளைபொருட்கள், சுமார் 32 இலட்சம் பேர் விவசாயத்திலும், 2 கோடி மக்கள் தொழில்துறையிலும் ஈடுபட்டுள்ளனர்.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்

முழுப்பெயர்:- சி.டெமியன் மிலன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, சித்திரம் வரைதல், கதைப் புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:- பி.ஜெனார்த்தனன்
கற்கும் பாடசாலை :-
கிளிநொச்சி மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- ஆ.அஜித்ராஜ்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:- கு.டிலக்ஷன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கதைவாசித்தல்.

முழுப்பெயர்:- லூ.வேஜியா வியோலினி
கற்கும் பாடசாலை :-
திருக்குடும்பம் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கணிதம்.

முழுப்பெயர்:- சா.கௌரிசா
கற்கும் பாடசாலை :-
வதிரி திரு இருதயக் கல்லூரி
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலிகேட்டல்.

முழுப்பெயர்:- இ.சத்தியஜெயந்தி
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய் மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :-10
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, நடனம், விளையாட்டு.

முழுப்பெயர்:- சு.நர்மதன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கவிதை எழுதுதல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................. ..................
திகதி ஒப்பம்

.................. ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## பொது அறிவு

1. இறக்கை இல்லாத பறவை எது? கிவி
2. அதிக நீரருந்தும் பறவை? புறா
3. மிகப் பெரிய முட்டையிடும் பறவை? தீக்கோழி
4. மிகச்சிறிய முட்டையிடும் பறவை? வேர்வெயின்
5. மிக வேகமாக பறக்கும் பறவை? சுவிப்ட் (மணிக்கு 200 மைல்)
6. நீண்ட காலம் வாழும் பறவை? தீக்கோழி

அ.ரேணுகா

இங்கே மடிக்கவும்



# நல்ல புத்திமதி

நன்றி - ரீங்கிள்
தமிழில் - அறிதிரு




## விடுகதைகளும் விடைகளும்

1. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ. அது என்ன?
2. பக்கமுள்ள பட்டினத்தை எட்டிப்பார்க்க முடியவில்லை. அது என்ன?
3. வெயிலில் மலரும், காற்றில் உதிரும். அது என்ன?
4. காயும், பூவும், இலையும், கறிக்காகும் மரமொன்று. அது என்ன?
5. ஓடியாடிக் கத்தும், உடலைத் தேடிக் குத்தும். அது என்ன?
6. வயிறு புடைக்கத் தின்றால், நிமிர்ந்து நிற்பான். அவன் யார்?
7. அடித்தால் அனையாது, எரித்தால் எரியாது. அது என்ன?
8. இட்டு முட்டைக்குள்ளே, தட்டுப்பலகை. அது என்ன?
9. சொறியன் குட்டையன், சந்தைக்குப் போகிறான். அது என்ன?
10. பார்த்தால் பச்சை, பழுத்தால் சிவப்பு, கண்ணில் பட்டால் தண்ணீர். அது என்ன?

1. குடை 2. முதுகு
3. வியர்வை 4. முருங்கைமரம்
5. நுளம்பு 6. சாக்கு
7. தண்ணீர் 8. நாக்கு
9. பாகற்காய் 10. மிளகாய்



ச.மஞ்சுகி,
தரம் - 6
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# உங்கள் கைவண்ணம்

த.தாட்சாயினி



எம்.ஜதுர்சினி
உடுவில் மகளிர் கல்லூரி.




# கிளியே நீ என் தோழி



வண்ணம் பல கொண்ட பச்சைக்கிளியே
கண்ணை நீ ஏன் பறிக்கின்றாய்?
உன்னைப்போல சிறகு விரிக்க
எனக்கு நிறைய ஆசை உண்டு.

உன்னுடன் இருந்து மொழிகள் கற்க
எனக்கும் ஆசை நிறைய உண்டு
உன்னைப்போல உயரப்பறந்து
உலகம் சுற்றி பார்க்க விரும்புகிறேன்.

காலை நேரம் உன்னிடம் வந்து
கதிரவன் மறைய வீடு செல்ல
உன்னைப்போல சிவந்த சொண்டு
எனக்குமிருக்க ஆசை உண்டு

தென்னம் கீற்று சலசலப்பிலே
தென்றல் குளிக்க ஆசை
சோலை தனில் சுற்றிடவே
கூட வருவேன் கிளித்தோழி.

ஆக்கம் ~ அ.ரேணுகா
தரம் 7
கிளி/பளை மத்தியகல்லூரி.

# நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய

## இரதோற்சவ சிறப்பிதழ்

இன்று (12.07.2003) காலை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா இடம்பெறுகின்றது. 64 சக்தி பீடங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரிபீடம் என்றழைக்கப்படுவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமாகும். இந்துப் பண்பாடுகளுக்கு எதிராக மிலேச்சர்களால் எவ்விடர் வந்தபோதும், அம்பாளின் ஆகமமுறையிலான பூசை வழிபாடுகள், திருப்பணிகள் தடையின்றி நடந்துவரும் சக்தித்தலம் நயினை நாகம்பாளின் திருக்கோயிலாகும். இயற்கையாகவே நாற்புறமும் அலையெறியுங்கடலாற் சூழப்பட்டு, மிகவும் பழைமை வாய்ந்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டு இன்றும் சைவத்தமிழ் அடியார்கள் உள்ளத்தில் மிகவுயரிய மகோன்னத மகிமையுடன் போற்றி வழிபடப்படும் திருத்தலம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலாகும்.

நயினை நாகபூஷணி அம்மன் பல்வேறு திருக்கோயில்களிலேயும் மெய்யடியார்களுக்குத் தனது பேரருட்கடாட்சத்தினை நல்கி வருகின்றாள். ஆன்ம கோடிகள் இறைஞ்சும் பெருவரங்களையெல்லாம் நல்கி அகிலாண்டேஸ்வரியாக விளங்கி நிற்கிறாள்.

உணர்வதற்கரிய மாபெரும் தெய்வம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன். அம்பாளின் வரலாற்றுச் சிறப்பு அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஞானிகளுக்கும், சித்தர்களுக்கும், யோகிகளுக்கும், ரிஷிகளுக்கும் இன்றைய அனைத்துப் பல்கலைக் கழக பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கும் ஆராயுந்தோறும் மலைப்பையும், பெருவியப்பையும் தந்து நிற்கின்றமையைக் கண்கூடாகவே நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

இன்றும், இனியெதிர்காலத்திலும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்திலுள்ள மூலமூர்த்தியின் தோற்றம், வடிவம், அதன் தத்துவவிளக்கம், மர்மம் என்பன துலக்கமுறாத வகையிலேயே இருக்கும். சிவாச்சாரியார்களும், ஆய்வாளர்களும் யோகிகளும் -மூலமூர்த்தி அம்பாளின் திருவுருவத்திற்குப் பல்வேறு விளக்கங்களைத் தத்தமது அனுபவத்திற்கும், அறிவுக்கும் ஏற்ப வெளியுலகிற்கு எழுதியும், பேசியும், உணர்த்தியும் வருகின்றனர். ஆராய ஆராய மிகவும் கீர்த்திவாய்ந்த தலமாக நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் திகழும்.

இன்று உலகின் நாலாபுறங்களிலுமிருந்து அம்பாளைத் தரிசித்து, தமது இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளும் அடியார்கள் வெகு அதிகளவிலான தொகையினராகும். இஃதொன்றே அம்பாளின் பேருளை அளவிடப் போதுமான சான்றாகும். இக்கோவிலினதும், மூலமூர்த்தி, எழுந்தருளி மூலமூர்த்திகள் பற்றிய பெருமைகளும், நாகதோசம் தீர்க்கும் வரலாறும் இவ்வாலயத்தின் புகழையும், கீர்த்தியையும், மகிமையையும், மகத்துவத்தையும் துலக்க உதவுவனவாகும்.

இத்திருத்தலம் மணிமேகலா தெய்வத்துடனும், கௌதமபுத்தருடனும் தொடர்புடையதென்பதனை மணிமேகலையினூடாகவும், மகாவம்சத்தினூடாகவும் அறிய முடிகிறது. ஆதிவரலாற்றுச் சான்றுகளாக இன்றும் காணக்கூடியதாகவுள்ள பாம்புசுற்றிக்கல், கருடன்கல், என்பவற்றையும், முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்துக் கல்வெட்டும், திருத்தேரிலேயுள்ள அம்பாள் ஆலய வரலாற்றைச் சித்தரிக்கும் புகழ் வாய்ந்த அழகிய சித்திரங்கள் ஆகியனவும் நாகபூஷணி அம்மனின் தனிப் பெரும் கீர்த்தியைத் துலக்கவல்லனவாகும். இயற்கை மூலிகையான வேப்பிலையின் மகத்துவத்தை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலே கண்கூடாகவே அனைவரும் அறியலாம். பல்வேறு பிணிகளையும் போக்கி சுகம்செய்யும் வல்லமையும், ஆற்றலும் ஸ்ரீ நாகபூஷணியென்னும் வேப்பிலை நாயகிக்கு உண்டு.

இன்றும் பெண்களின் உள்ளத்தில் அதியுயர் தெய்வமாகவும், நம்பிக்கைக்குரிய தாயாகவும் திகழ்கிறாள் நயினைபதி நாகபூஷணி அம்பாள். திருமணம், மகப்பேறு, உடற்சோர்வு, குடல்நோய்கள், தோல் நோய்கள் என்பவற்றினை நீக்கும் பேராற்றல் நயினைபதி நாகபூஷணி அம்பாளின் ஆலயத்துக்கு உண்டு. நவராத்திரி, ஆடிப்பூரம், திருவெம்பாவை என்னும் சமய விரதநாட்களிலே- அம்பிகையை உபாஷிக்கும் அடியார் தொகை இன்று பெருகிக்கொண்டே வருகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் - நாகம்மாளின் பெருங்கருணையேயாகும். அருளாட்சியின் வீச்சு, அதன் மகிமை எம்மால் எடுத்துரைக்கமுடியாத வகையிலே விகசித்து, விரிந்து, பரந்து, ஆழ்ந்து, அகன்று நிற்கின்றது.



## திருத்தேர்பவனி - அறங்காவலர் சபையின் ஆசிச்செய்தி

இன்று அறங்காவலர் சபையினர் - அம்பாளுக்கென புதியதொரு இராஜகோபுரத் திருப்பணியைத் தொடங்கியுள்ளனர். 99 அடி சப்ததள இராஜகோபுரத் திருப்பணி தொடங்கப்பட்டுள்ளது. இதனை அடியார்கள் அனைவரும் மனதிலிருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அலையெறியும் சமுத்திரத்தின் மத்தியிலே, அழகுமிளிரும் ஒரு சக்திபீடம் - மேலும் ஓங்கி ஒலிக்கவும், உயர்வாகத் தோற்றமளிக்கவும், பேரழகை மிகுவிக்கவும் - இராஜகோபுரத் திருப்பணியானது மிகவும் அவசியம் என்பதனை அனைவருமே ஒத்துக்கொள்வார் என்பது எமது திடமான நம்பிக்கை. புண்ணியப் பெரும் பங்களிப்பையும், பெருநிதியினையும், திருப்பணி நன்கொடையினையையும் அம்பாளின் இராஜகோபுரத் திருப்பணிக்கு நல்கி, இந்தத் திருப்பணி இனிதே நிறைவுறப் பரிபூரண ஒத்துழைப்பினை நல்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம். அம்பாளின் 'அருளுணர்வு' அடியார்களின் துடிப்பு, அறங்காவலர் சபையின் முயற்சிகள் இவை அனைத்தும் இணைகின்ற செயற்பாடே, இராஜகோபுரத் திருப்பணிகள். இப்புண்ணியத்தில் இன்றுமுதலே நீங்களும் இணையலாம், உதவலாம். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் உதவச்செய்யலாம். பிரசாரம் செய்யலாம், சக்தியை வியக்கலாம். அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் கருணை உள்ளம் படைத்த தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன். இலங்கையிலே வசிக்கும் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள் இன்னும் எத்தனையோ சமயப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எவ்வித வேறுபாடுகளும், பேதங்களுமின்றி இங்கு வந்து அம்பாளைத் தரிசித்து, அன்னதானத்தில் பங்குகொண்டு, வரங்கள் பல பெற்றுச் செல்கின்றனர். 'சர்வமத சந்நிதி' எனத் திகழ்வது நயினாதீவு. எல்லாச் சமயங்களுக்கும், சமயவாதிகளுக்கும் இடம் தந்து, பெரும் தத்துவமாக வியாபித்துள்ள 'சைவசித்தாந்தம்' என்னும் ஆணிவேரின் பலத்துடனும், ஆகம வழிபாட்டு மரபினையும், சைவ நீதியினையும் நிலைநிறுத்தும் நயினை நாகபூஷணி அம்மனின் திருத்தேர்த் திருவிழா வைபவம் - இராஜயோக போக வைபவமேயாகும், இது தனிப்பெரும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

இன்றைய நாளில் அம்பிகையின் திருத்தேர்ப் பவனியிலன்று நாம் அனைவரும் மனமொன்றிப் பிரார்த்திக்கத் தக்கது என்னவென்றால் - இந்த நாட்டிலே நிரந்தரமான சமாதான சகவாழ்வும், சாந்தியும், ஒற்றுமையும் ஏற்பட வேண்டும் என்பதுடன், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது நிம்மதியான வாழ்வுக்கு - அம்பாள் திருவருள் சுரந்து, வழிசமைக்க வேண்டும் என்பதேயாகும். 'சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயார் சீலமுற்று'. நித்திய சாந்தியையும், அமைதியையும் திருவருள் சுரந்து நல்கிடம்மா! என்று பிரார்த்திப்போமாக.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்**

## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றாகத் திகழ்வது நயினை நாகபூசணி அம்பாள் ஆலயம் ஆகும் நாகவழிபாடும், சக்தி வழிபாடும் இணைந்திருக்கும் திருத்தலமாக நாகபூசணி அம்பாளின் ஆலயம் காணப்படுகிறது. மணிபல்லவத்தீவிலிருந்து தன்னை நாடி வரும் அடியார்களின் துன்பங்கள், துயரங்கள் அனைத்தையும் நீக்கி, அம்பிகை அருள்புரிந்து கொண்டிருக்கிறாள்.

அம்பிகையைத் "தாயைப் பிரகாஜினி" என வேதங்கள் கூறுகின்றன. கருணையே வடிவமான தாய்த்தெய்வம் - தாயுள்ளத்துடன் அடியார்களின் துன்பத்தைப்போக்கி, மணிபல்லவத்தீவில் இருந்து அருளாட்சி செய்துகொண்டிக்கிறாள். அம்பாளுடைய மகோற்சவ காலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கே கூடுகிறார்கள். அமுதசுரபி மண்டபத்தில் அடியார்களின் பசிப்பணி போக்கும் அன்னதானம் மிகவும் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

அம்பிகை தன்னை வழிபடும் அடியவர்களுக்கு தனம், கல்வி, தளர்வறியாமனம், தெய்வவடிவு, நெஞ்சில் வஞ்சம் இல்லா உறவு, வாழ்வில் உயர்வு ஆகிய அனைத்தையும் தருவாள் என்றே அபிராமிப்பட்டர் - அபிராமி அந்தாதியிலே குறிப்பிடுகிறார். தியானிப்பவன் - தியானிக்கப்படும் பொருளாக மாறி விடுவான். (தியானத் யாத்துரு தேய ரூபா) என்றே லலிதா சகஸ்ர நாமும் கூறுகிறது. அகிலாண்டேஸ்வரியாக இருந்து அனைவருக்கும் அருள் செய்யும் நயினை நாகபூசணி அம்பாள், இன்று மகாராணியாகத் தேரிலே பவனி வந்து, அருளினை அடியவர்களுக்கு வாரி வழங்குகிறாள். அனைத்து மக்களுக்கும் அம்பிகையின் அருள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**தி.மகேஸ்வரன் (பா.உ)**
**இந்து சமய வீவகார அலுவல்கள் அமைச்சர்.**


## இரதோற்சவம் சிறக்க வாழ்த்துவோர்

தேரேறும் பெருமாட்டி எல்லா நலன்களையும் மக்களுக்கு அருள பிரார்த்திக்கின்றோம்

**PAPER HOUSE**
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**சிங்கம் இண்டஸ்ரீஸ்**
290, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பாளின் தேர்த்திருவிழா சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

**PARATHAN MULTIPLE SERVICES**
110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

திருவீதியுலா வரும் அம்பாளின் அருள் வேண்டி நிற்கின்றோம்

தஞ்சமென அடைந்தேன்!
தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரஷிப்பாய்
கெஞ்சுகிறேன் அம்மா!

**நயினாதீவு - புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கம்**
தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.

# நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய

## இரதோற்சவ சிறப்பிதழ்

### புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நடைபெறும் இன்றைய நன்நாளில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும் நான் வடக்கு மக்களுக்காக சேவையாற்றுவதற்கு என்னை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பிரதமகுருக்கள் என் அன்புக்குரியவர். நாகபூஷணி அம்மன் ஆலயம் தொடர்பாக என் மனதில் பெரும் பக்தி உள்ளது. அக்கோயிலுக்குத் தொடர்ந்து செல்வது எனது வழக்கம்.

இவ்வருடம் இடம்பெற்ற கொடியேற்ற திருவிழா உற்சவத்திலும் கலந்துகொண்டேன். 20 வருடங்களாக சீரழிந்த வடபகுதியை, ஒரு வருடகால குறுகிய இடைவேளைக்குள் சீரான நிலைக்கு க் கொண்டுவரக்கூடிய வகையில் வடபகுதியைப் புனரமைப்பதற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அதற்காக இரவுபகலாக எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெற அம்பாள் அருள்புரிய வேண்டும் என இறைஞ்சி நிற்கின்றேன்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று மக்களனைவரும் சாந்தி, சமாதானத்தோடு வாழ அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன,**
**புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள்**
**விவகாரங்கள் அமைச்சு**

### மகத்தான தீர்வு தர மணிபல்லவத்தில் தேரேறி வருகிறாள்

போரை மண்ணில் நிறுத்திடவே தேரிலேறி வருக!

புதிய வாழ்வை மலர வைக்க தேரிலேறி வருக!

சேரும் பகையை விலத்திடவே தேரிலேறி வருக!

செல்வ வாழ்வை செழிக்க வைக்க தேரிலேறி வருக!

கோரும் உரிமை கிடைக்க வைக்க தேரிலேறி வருக!

கொள்கை காத்து உழைத்திடவே தேரிலேறி வருக!

பாரில் மக்கள் நலனைக் காக்க தேரிலேறி வருக!

பஞ்சம் நாட்டில் தீர்ந்து போக தேரிலேறி வருக!

நீளும் துயரை நிறுத்திடவே தேரிலேறி வருக!

நிரந்தரத் தீர்வு தந்திடவே தேரிலேறி வருக!

ஆளும் உரிமை தமிழர் பெறவே தேரிலேறி வருக!

அரவணைத்து காத்திடவே தாயே தேரிலேறி வருக!

## மணிபல்லவத்தில் தேரேறும் நயினை நாகபூஷணி



ஈழமணித் திருநாட்டில் வடபால் யாழ்ப்பாணத்தை அணிசெய்து கொண்டிருக்கும் சப்ததீவுகளில் ஒன்று நயினாதீவாகும். வரலாற்று சிறப்புமிக்க அழகிய இத்தீவில்- அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரிபீடத்தை அலங்கரித்துக்கொண்டு, நாகராஜேஸ்வரி, நாகேஸ்வரி, நாகபூஷணி என்ற திருநாமங்களோடு அம்பாள் திருவருளாட்சி செய்கின்றாள்.

நாகம் வழிபட்டதனால், நாகத்தினால் பூசிக்கப்பட்டதினாலே அம்பிகைக்கு இத்திருநாமம் வழங்கப்படலாயிற்று. இதற்கோர் அழகிய வரலாறும் உண்டு.

நயினாதீவுக்கு வடபுறத்திலே அனலைதீவின் ஒரு பகுதியான புளியந்தீவு உண்டு. இத்தீவிலிருந்தே நாகமொன்று தினந்தோறும் பூக்கொண்டுவந்து அம்பிகையை வழிபட்டு வந்தது.

இவ்வாறு ஒருநாள் அந்த நாகம் அம்பிகையை வழிபடக் கடலின் மத்தியிலே வந்துகொண்டிருந்தது. இவ்வேளையில், கருடன் ஒன்று நாகத்தினைக் கண்டுகொண்டது. பாம்பினைக் கொல்வதற்கு எத்தனித்தது. இதனைக் கண்ட நாகம், கடல்நடுவே காணப்பட்ட கல்லொன்றிலே சுற்றிக்கொண்டது. கருடனும் அப்பாம்பு சுற்றிய கல்லுக்கெதிரே இன்னோர் கல்லில் அமர்ந்துகொண்டது.

இவ்வேளையில், இந்த நிகழ்வுகளை அக்கடல் வழியே மரக்கலத்தில் பண்டங்களை ஏற்றி வந்த வணிகன் ஒருவன் கண்டான். பாம்பின்மீது இரக்கம் கொண்டு, அதனைக் கொல்லவேண்டாமெனக் கருடனிடம் கேட்டுக் கொண்டான்.

இவ்வேளையில், கருடன் அந்த வணிகனிடம் கேட்டுக்கொண்டது - உனது செல்வம் அனைத்தையும் கொண்டு நாகேஸ்வரிக்குக் கோயில் கட்டுவதானால், நான் பாம்பைக் கொல்லாமல் விட்டுச்செல்கின்றேன் என்றது. வணிகனும் அக்கருடனின் வேண்டுகோளை ஏற்று, அவ்வாறு செய்வதாக உறுதியளித்தான். கருடன் - நாகத்தை விட்டு விலகிச் சென்றது. நாகமும் அம்பிகையைப் பூசிக்கச்சென்றது.

வணிகனும் தனது ஊருக்குப் போய் நடந்த சம்பவத்தைத் தனது மனைவிக்கு உரைத்தான். பின் இருவரும் இரவு நித்திரைக்குச் சென்றனர். அவர்கள் இருவரும் நித்திரை செய்யும் சயன அறையிலே, அதிசயமான போரொளி திடீரென தோன்றிற்று. அவர்கள் அவ்வொளி எதுவாக இருக்கலாம் என ஆராய்ந்து பார்த்தனர்.

அது விலைமதித்தற்கரிய ஒரு நாகரத்தினக்கல். அக்கல்லிலிருந்தே அந்த ஒளி வந்தது என்பதைக் கண்டனர். நாகபூஷணியின் திருவருளை வியந்தனர். நயினைவந்து அம்பிகைக்கு ஒரு எழில்க்கோயில் அமைத்தனர்.

இக்கதையின் சான்றாக நயினாதீவுக் கடல்நடுவே இன்னும் அவ்விரு கற்களும் காணப்படுகின்றன. அவ்விரு கற்களும் "பாம்பு சுற்றியகல்","கருடன் இருந்த கல்" என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றன.

மணிமேகலைக் காப்பியத்தில் கூலவணிகன் - சீத்தலைச் சாத்தனாரால் "மணிபல்லவம்" என்னும் தீவு பற்றிய செய்தி கூறப்படுகின்றது. இம்மணிபல்லவமே நயினாதீவு என்பது ஆய்வாளர்கள் பலரின் முடிவாகும்.

நாகபூஷணி அன்னையின் ஆலயக் கருவறையில், சுயம்பு மூர்த்தமாகத் தோன்றிய ஐந்து தலை நாகமும், அம்பாளும் இணைந்த முர்த்தம் உள்ளது.

இம்மூர்த்தம் பதினான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தென்றும், நாகவழிபாட்டோடு தொடர்புடைய மிகப்பழமையான சுயம்பு முர்த்தம் எனவும் சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் எம்.நரசிம்மன் எடுத்துக் கூறியுள்ளார்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களோடு, பன்னெடுங்காலமாக நயினையெம்பதியில் வீற்றிருந்து, நாடுவோர்க்கெல்லாம் நல்லருள் பொழிகின்ற நாகம்மையின் நலம் தரும் மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தினமும் அம்பாளைத் தரிசிப்பதற்காக ஏராளமான அடியவர்கள் அலைகடல் தாண்டிச்சென்று வழிபட்டு வருகின்றனர். ஆனிப் பூரணைநாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு, பதினைந்து தினங்கள் மஹோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத் திருவிழாக்களிற் கொடியேற்றம், கைலைக் காட்சித் திருவிழா, மஞ்சத் திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழா, தெப்பத் திருவிழா என்பன சிறப்புச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

இவ்வாண்டும் மஹோற்சவம் அமைதியான சூழலிலே நடைபெற்று வருகின்றன. இந்த அமைதி நீடிக்க வேண்டும். எதிர்பார்க்கும் ஈழத்தமிழ் மக்களுக்கான நல்ல தீர்வும் - அம்பாளின் மஹோற்சவத்தோடு சேர வேண்டும் என எல்லோரும் அன்னையை வேண்டுவோம். அவளருள் பெற்றுய்வோமாக.

## நயினையம் பதியாள்

வீழிக்கே யருளுண் டாபீராமா வல்லிக்கு
வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபடநெஞ்சுண்
டெமக்கவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க
ளேசெய்து பாழ்நகரக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம்
மோடென்ன கூட்டினியே

*- பட்டர்பிரான்*

"எறிதராங்கம் உடுக்கும் புவனம் கடந்த
ஒருவன் திருவுளத்து அழகு ஒழுக
எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமாம்"

*அன்னை பராசக்தி ஆயிரம் திருநாமங்களோடு உலகெலாம் வியாபித்து நிற்பதோடு, சிறப்பாகச் சக்திபீடங்கள் அறுபத்துநான்கில்- உருவத் திருமேனி தாங்கி எழுந்தருளி அருள் பாலிக்கிறாள்.*

*அப்பீடங்களில் ஒன்றான நயினை – காலத்தால் மூத்த திருப்பதி.*

*அலை கடல் நடுவே கோயில் கொண்டு அருளாட்சி செய்யும் அம்மை இவர் அற்புதங்கள் அளப்பில. கன்ன பரம்பரைக் கதைகளாக நிலவுவன ஏராளம். வரலாற்று ரீதியானவையும் பல.*

*மணிமேகலை கூறும் மணிபல்லவம் நயினையே என்ற கருத்துக்கு அண்மையில் உசாவல் ஏற்படுத்தப்பட்டுள்ளபோதிலும், இதன் புராதனம் நிலை நாட்டப் படுகிறது.*

*நயினை அன்னையின் அருட் பிரபாகத்தை, கன்னியாகுமரிக் கரையில் நின்று சிந்திக்கும்போது தெரிந்துகொள்ளலாம்.*

*"நீலத்திரைக்கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி"*

*என்கிறார் பாரதியார். ஏன் குமரித்தெய்வம் தவம் செய்கிறாள்? என்ற வினாவை எழுப்பினால்...*

*மலைபோல எழுந்து உருண்டுவரும் அலைகள் – நாட்டுக்குள் புகுந்து தன் அடியார்களுக்குத் துன்பம் தரக்கூடாது என்பதற்காகவே தவம் செய்கிறாள் குமரித்தெய்வம் என்று நினைக்கத்தோன்றுகிறது.*

*ஐம்பது ஆண்டுகளுக்கு முன் குமரிமுனையில் நின்றபோது எழுந்த சிந்தனை–*

*"தாயே நீ ஒருபக்கத்தால் மட்டும் வரக்கூடிய இன்னலைத் தவிர்க்கத் தவம் செய்கிறாய். என் அன்னை நயினை நாகபூஷணி சமுத்திரத்தின் மத்தியில் ஒரு சில சதுர மைல்களே பரப்பாகக் கொண்ட நயினைத்தீவையே காத்து நிற்கிறாளே. என்னே அவள் பேரருள்"*

*இது மட்டுமா?*

*தன் அடியார்கள்– கல்வி வளத்தை, செல்வத்தை, தெய்வம் போற்றும் பெரும் பண்பை, விருந்தோம்பும் தமிழர் சால்பை பெருக்கி நிற்கும் நயினைக் கிறைவியின் பேரருளை நினைந்து நினைந்து இன்புறலாம். நாகர்களும், இயக்கர்களும் வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இலங்கையில் வாழ்தார்கள் என்று பேசப்படுகிறது. ஆதிக்குடிகளாகிய நாகர்களால் இத்திருப்பதி நிறுவப்பட்டிருக்கலாம் என்று கொள்ளவும் இடம்தரும் கதைகள் பலவுள்ளன.*

*நாக வணக்கம் மிகத்தொன்மையானது. இறைவனுக்குத் தொண்டு செய்ய வசதியாகப் பாம்புக்கால் வேண்டிப் பெற்ற அடியாரின் கதை சைவத்தின் பழங்கதை. இறைவிக்குப் பூக்கொண்டு வந்து சாத்தி இன்புற்ற பாம்பின் கதை புதுக்கதை. நாகங்கள்– அன்னையின் அருளாட்சியில் அச்சமின்றி உலாவருவதும், யாரையும் தீண்டாத பண்புடன் இத்தீவில் வலம் வருவதும் இன்றும் நடக்கும் அற்புதமாகும்.*

*அலை கடல் நடுவே அமர்ந்து அலமலரும் அடியார்களை – அஞ்சேன் என்று அபயகரம் காட்டி, அருளைத் அள்ளித்தரும் வரதகரம் நீட்டி, அன்பு காட்டும் தெய் வம் நயினை நாகபூஷணி.*

*நயினைத்தாய் அருளை மட்டுமல்ல, பொருளையும் அள்ளித்தருகிறாள். நல்லாற்றுப்படுத்தும் அறங்காவலர்குழு– இவள் பெற்றபேறு. அடியார் பசி தீர்த்து, அவர் பொலிவு கண்டு மகிழும் திருக்கூட்டம் – இவள் படைத்த பெரும் பயன்.*

*"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதையே மனதில் கொண்டு, சமுதாயப்பணியிலும் அறங்காவலர் சபை கால் பதித்தமை கேட்டு மகிழாதார் இல்லை.*

*தாயே! நான் உன் மகன். எப்படி?*

*மக்கட் பேற்றுக்காக துடித்த என் பெற்றோர் – இராமேஸ்வரத்தில் நாகப்பிரதிஸ்டை செய்து என்னைப் பெற்றார்களாம். இருந்தும், முற்றும் நிமிராத மனத்தால் என்னை உனக்கு விற்றார்கள். உனக்காக என்னை வாங்கியவர் – அமரர் சிவஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் (சின்னத்துரைக் குருக்கள்). உன் பிள்ளை ஆகையால், என்னைப் பண்ணைக்கடலும் கொள்ள முடியவில்லை, பின்வந்த கோயிலும் கொள்ளமுடியவில்லை. இந்தத் தெம்பிலே ஒன்று கேட்கின்றேன்.*

*இந்த நாட்டுக்கு அமைதி தா! பட்டதெல்லாம் போதும். குற்றங்கள் பொறுத்திடுவாய். எங்கள் தவம் போதாது. ஒத்துக் கொள்கிறேன்.*

*நின்பால் தீராத காதலுடன் வழிபட்ட எங்கள் மூதாதையர் மகிழ வளமான வாழ்வு தா! நின் அடியாரைப்போற்றும் நல்லநிலை தா!*

*நல்லனவே செய்யும் நலன்பெருக அருளம்மா!.*

**க. சிவராமலிங்கம்,**
**முன்னாள் பிரதி அதிபர்,**
**யாழ். இந்துக்கல்லூரி.**

சிறப்பு மலர் அனுசரணை

மாண்புமிகு அமைச்சர்

பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன

புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல்,
மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சு.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.
திருக்குறள்.

# நமது நோக்கு

## சதிகளுக்கு ஓர் அறிவிப்பு!

ஆளுக்கும் அந்தஸ்துக்கும் தகுந்தமாதிரி நடக்க வேண்டும் எனக் கூறப்படுவது மரபு. குறிப்பாக - கௌரவம் மிக்க பதவிகளில் அமர்வோர், அப்பதவிகளுக்குரிய மதிப்புடனும், கௌரவத்துடனும் நடந்துகொள்ளவேண்டும் என்பது சமூகத்தின் பொதுவான எதிர்பார்ப்பாகும்.

ஆனால் -

ஆள் எப்படி இருந்தாலென்ன? அவர் அமரும் பதவிக்கென்றொரு கண்ணியத்தைப் பேணவேண்டும் என்ற அடிப்படையைகூடப் பொருட்படுத்தாதவராக நடந்துகொள்வதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - மீண்டுமொருமுறை வரம்பு மீறியிருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையிலும், நாட்டின் நிர்வாகத் தலைவி என்ற ரீதியிலும்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடத்தைகள், அறிவிப்புக்கள், கருத்துக்கள் உட்பட அவர் உடல்மொழிகள் வரை அனைத்தும் நியாயபூர்வமானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும் என்பதுதான் மரபாயிருக்க-

அவரோ அத்தகைய கௌரவமான வழிமுறைகள் யாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு, மூன்றாந்தர அரசியல்வாதியாகவே தன்னைப் பிரகடனப்படுத்தி வருகிறார். அடிக்கடி ஏறுக்குமாறான அறிவிப்புகளால்- குழப்பங்களையும், தேவையற்ற பிரச்சினைகளையும் உருவாக்கிவரும் அவர், இறுதியாக புதுக்கதை ஒன்றை அவிழ்த்துவிட்டிருக்கிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப்புலிகளால் தாக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கும் அவர் -

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனச் சாரதிகளால் அல்லது அவர்களுக்கு நெருங்கியவர்களால், இந்த மரண அச்சுறுத்தல் ஏற்படும் எனத் தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பின் உள் நோக்கங்கள் பலவாக இருப்பினும் - இரண்டு முக்கிய விடயங்களினூடாக இந்த அறிவிப்பின் தாக்கம் மிகப் பாரதூரமாக அமைகின்றது.

ஒன்று, விடுதலைப் புலிகள் அமைதி முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றபோது - அபாண்டமான குற்றச்சாட்டுக்களை அவர்கள் மீது திணிக்கும் ஜனாதிபதியின் நோக்கமாகும்.

ஏற்கனவே, விடுதலைப் புலிகள் போருக்குத் தயாராகிவிட்டதாக அறிவித்து, அமைதி முயற்சிகளிலான தமது பொறுப்புணர்வை கேலிக்குள்ளாக்கிய ஜனாதிபதி -

இப்போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - விடுதலைப் புலிகளால் தாக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும்,

நாடாளுமன்றத்திற்கு பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும்போதோ அல்லது வீதிகளில் நடமாடும்போதோ அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் எனவும் கூறியிருக்கிறார்.

இதனால், முன்னர் - புலிகள் போருக்குத் தயாராகி வருவதாக கூறிவிட்டு, இப்போது தாக்குதல் நடக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறும் ஜனாதிபதி - நாளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது யாரேனும் தாக்கினால்கூட, அதனை விடுதலைப் புலிகள் தலையின் மீதே சுமத்திவிடுவார் என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது.

ஏலவே - பாதாள உலகக் கோஷ்டிகளாலும், அரசியல் பிரச்சினைகளாலும், தெற்கில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் அண்மைக்காலத்தில் கொல்லப்பட்டுள்ள நிலையில், இனிமேலும் அவ்வாறான சம்பவங்கள் ஏதும் நடக்குமாக இருந்தால் - அவற்றை விடுதலைப் புலிகள் பேரில் சுமத்தி, நெருக்கடியைத் திசை மாற்றிவிடும் சதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம், ஜனாதிபதியின் அறிவிப்பினால் ஏற்பட்டிருக்கிறது.

அதேவேளை - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிரச்சினைக்குள்ளாக்கும் கைங்கரியத்தை, ஜனாதிபதியின் அறிவிப்பு ஆரம்பித்திருக்கின்றது.

ஜனாதிபதி என்ற முறையில், சகல அரசியற்கட்சிகளையும் ஒரேதளத்தில் நோக்கவேண்டிய இடத்தில்- விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள் என்ற நிலைப்பாட்டில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அடாவடித்தனங்களுக்குள்ளாக்கும் முயற்சிகளுக்கு ஓர் தொடக்கமாகவே அவரது புதிய அறிவிப்பு அமைவதாக கருதமுடியும்.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் - அண்மைய நாட்களாக நாடாளுமன்ற சட்டவிதிகளுக்கும், பாதுகாப்பு முறைமைகளுக்கும் முரணாக - மலர்வளையங்களும், சவப்பெட்டிகளும் கொண்டுவரப்படுவதும்-

மோப்பநாய்களின் துணைகொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பெட்டகங்கள் ஆராயப்படுவதுவமாக - பெரும் களேபரங்கள் நடைபெற்றுவருகையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள், நாடாளுமனறில் எழுந்தமானமாக அதிகரித்து வரும் நிலையில் -

கூட்டமைப்பு எம்.பிக்களை, அவர்களது வாகனச் சாரதிகளை, பணியாளர்களை - தேவையற்ற சந்தேகங்களுக்குள்ளாக்கி - கவனத்தைத் திசைதிருப்புவதற்கான உத்தியாக, ஜனாதிபதியின் அறிவிப்பு வெளிவந்திருக்கலாம் எனக் கருதுவதற்கும் பெருவாய்ப்புக்களுள்ளன.

மொத்தத்தில் - அரசியல் குறுக்கு வெட்டுக்களுக்காக ஜனாதிபதி செல்லும் பாதை - அவரது பதவிக்குரிய கௌரவத்தைத் தொலைத்திருப்பதோடு, அமைதிக்குச் சவாலாகவும், இனவிரோதத்தைத் தூண்டிவிடுவதாகவுமே அமைந்திருக்கின்றது.

# கடற்படைக்கு நீண்டதூர ஆயுதங்கள்; கொள்வனவுசெய்ய இஸ்ரேலுக்கு குழு

கடற்படைக் கலங்களுக்கான நீண்டதூர வலுவுள்ள கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கே - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோர் இஸ்ரேலுக்குப் பயணமாகியுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நீண்டதூர கனரக ஆயுதங்களைக் கடற்படைக்குப் பெற்றுத் தருமாறு, நீண்டகாலமாகவே கடற்படையினர் கோரிவந்தனர். புலிகளின் தாக்குதல் படகுகளைச் சமாளிக்க, கடற்படைக்கு இது அவசியமெனக் கருதப்பட்டதாலேயே இந்தக் கோரிக்கை அரசிடம் முன்வைக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் - அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து, கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு, அரசாங்கம் விருப்பம் தெரிவித்திருந்தது.

ஆனால், இஸ்ரேலிடமிருந்து மட்டுமே அந்த ஆயுதங்களை விற்பதற்கு விருப்பம் தெரிவித்து பதில் அனுப்பப்பட்டது. இதையடுத்தே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோர் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளனர்.

அவர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படையதிகாரிகளுடன் - இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். அத்துடன், கொள்வனவு செய்யப்படவுள்ள ஆயுதங்களைப் பார்வையிடவுள்ளதுடன், இந்த ஆயுதங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நேரில் அவதானிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதியே - பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான இந்தக் குழு, நாடு திரும்பும் எனவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## முரளிதரனின் பெயரில் கிரிக்கெட் அக்கடமி!

(கொழும்பு)

கிரிக்கெட் வீரர் - முத்தையா முரளிதரனின் பெயரில், கிரிக்கெட் அக்கடமி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கையில் முதலாவதாக அமைக்கப்படவுள்ள கிரிக்கெட் அக்கடமிக்கு, முரளிதரனின் பெயரை இடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே சிபார்சு செய்துள்ளார்.

இந்தக் கிரிக்கெட் அக்கடமிக்கான ஆரம்ப வேலைகள், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த கிரிக்கெட் அக்கடமி கண்டியில் அமைக்கப்படும். இதன்மூலம் கிரிக்கெட் துறையில் நுழையும் வீரர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

# மாவிட்டபுரம் உற்சவத்துக்கு பக்தர்கள் தனிப்பட்ட வாகனங்களில் செல்லத் தடை!

(மல்லாகம்)

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்து - மாணவன் ஒருவனைப் படையினர் கைதுசெய்ததையடுத்து, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்திற்கு, பக்தர்கள் தமது வாகனங்களில் செல்லப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

தனிப்பட்ட வாகனங்களில் செல்பவர்கள் - வாகனங்களை தெல்லிப்பளை சோதனைச்சாவடியில் அவற்றை நிறுத்திவிட்டு, விசேடமாக ஒழுங்குசெய்யப்பட்ட போக்குவரத்துச் சபையின் பஸ்வண்டியில் செல்ல அனுமதியளித்துள்ளனர்.

இதேவேளை - யூனியன் கல்லூரி மாணவர்கள் தினமும் பாட்சாலைக்குச் செல்லும்போது, மாணவர் தலைவர்களால் இனங்காணப்பட்ட பின்னரே பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதால், நீண்டநேரம் படையினரின் முன்னரங்கப் பகுதியில் காத்து நிற்கவேண்டியுள்ளது - குறிப்பிடத்தக்கது.

## நான்கு செயற்திட்டங்களை யு.எஸ்.எய்ட் அறிமுகம் செய்யும்!

யு.எஸ்.எய்ட் நிறுவனத்தினால், யாழ்.மாவட்டத்தில் - நான்கு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தமது செயற்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக, கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்டத்தில் நான்கு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த நான்கு திட்டங்களிலும் - பாடசாலைகளை அபிவிருத்தி செய்தலும், புனரமைத்தலும் என்ற திட்டமே, முன்னிலைப படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குரங்குப்பாஞ்சான் விவகாரம் நோர்வே மூலம் பேசப்படும்!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் காட்டுப்பகுதியில், புலிகளால் அமைக்கப்பட்டுள்ள புதிய முகாமை அகற்றுவதற்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்காவிட்டால், அரசாங்கம் நோர்வே அரசுமூலம் பேச்சுக்களை நடத்தவிருப்பதாக - நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண - கண்காணிப்புக்குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதும், இது பயனளிக்காதுபோனால், நோர்வே அரசாங்கம் மூலம் புலிகளுடன் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது, என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# இரட்டைச் சம்பளம் பெற்றுக்கொள்ளும் துறைமுக அதிகாரசபை அதிகாரிகள்!

### — விசாரணைக்கு சந்திரிகா பணிப்பு —

(கொழும்பு)

துறைமுக அதிகாரசபையின் தலைவர், உபதலைவர் மற்றும் மூன்று அதிகாரிகள் - இரட்டைச் சம்பளங்கள் பெறுவது குறித்து விசாரணைகளை நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

துறைமுக அதிகாரசபையின் தலைவர், பராக்கிரம திஸநாயக்க, அதிகாரசபையிடமிருந்து 44 ஆயிரம் ரூபாவையும், இதனுடன் இணைந்த நிறுவனமான, ஜே.சி.ரி நிறுவனத்திலிருந்து 22 ஆயிரம் ரூபாவையும் சம்பளமாகப் பெற்றதாகவும்,

துறைமுக அதிகாரசபையின் துணைத்தலைவர் எம்.எச்.எம். சல்மான் - அதிகாரசபையிடமிருந்து 34 ஆயிரம் ரூபாவையும், நிறுவனத்திடமீருந்து 14 ஆயிரம் ரூபாவையும் சம்பளமாகப் பெற்றுவருகின்றார்.

இதேபோல மேலும் மூன்று அதிகாரிகளும் - இவ்வாறு இரட்டைச் சம்பளங்களைப் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்தே விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ் எம்.பிக்கள் சிலருக்கு நாடாளுமன்று வரப் பயமாம்!

### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் - பாதுகாப்பு அச்சுறுத்தலால் நாடாளுமன்றத்துக்கு வருவதைத் தவிர்த்து வருவதாகவும், இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன, சபாநாயகரிடம் கேட்டுள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே, அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், குறிப்பிட்ட கட்சித் தலைவர்கள் இது தொடர்பாக அறிவித்தால் மட்டுமே - தன்னால் நடவடிக்கை எடுக்கமுடியும், எனத் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர் ஒருவர் மேல்நீதிமன்றால் விடுதலை!

அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைதாகித் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் - திருகோணமலை மேல்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும், 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் மணகிண்டிமலை பகுதியில் படையினருக்கு மரணத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகியிருந்த இளைஞரே விடுவிக்கப்பட்டவராவார்.

ராஜதுரை விஜயசுந்தர் என்ற இந்த இளைஞர் மீதான குற்றச்சாட்டினை, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் அரச சட்டத்தரணி மீளப்பெற்றதையடுத்தே சந்தேக நபரை விடுவிக்க நீதிவான் தீர்ப்பளித்தார்.

## கிரிக்கெட் போட்டியில் சாதனை

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 14 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில், யாழ்.மத்தியகல்லூரி வீரர்களான நவநீதன், சுதர்சன் ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக சோடி சேர்ந்து 233 ஓட்டங்களைப் பெற்று யாழ்.மாவட்ட சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளனர்.

இந்தப் போட்டியில் நவநீதன், சுதர்சன் ஆகிய இருவரும் சதம் அடித்து சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

# நீதியான அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய உலக நாடுகள்

மிகுந்த சோகம் நிறைந்ததும், மிகக் கொடூரம் வாய்ந்ததுமான, கறுப்பு ஜூலை இனக்கலவரங்கள் நடைபெற்று, இருபது ஆண்டுகள் ஆகின்ற இந்த வேளையிலும், அன்றைய தமிழினப் படுகொலைகளின் வேதனைகளும், வடுக்களும் எந்த ஒரு தமிழ்மகனின் நெஞ்சத்தை விட்டு விலகாமல்தான் இருக்கும்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஜூலை மாதம் கறுப்பு ஜூலை - என்ற சொற்றொடரால்தான் இன்று வரை அழைக்கப்பட்டு வருகின்றது. அந்தளவிற்கு - அன்று 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம், இலங்கைத் தீவில் நடைபெற்ற - இனக்கலவரம் என்று அழைக்கப்பட்ட - தமிழினப் படுகொலைகள், சிறிலங்கா அரசின் அராஜகத்தின் கேவலமான, கீழ் நிலையை உலகத்திற்கு எடுத்துக்காட்டின.

இந்தத் தமிழினப் படுகொலைகள், திடீரென எழுந்த ஆவேசத்தால் நடத்தப்பட்டவை அல்ல. ஒரு பௌத்த - சிங்களப் பேரினவாத அரசால், திட்டமிடப்பட்டு - முறையாகச் செயற்படுத்தப்பட்ட தமிழினப் படுகொலைகள்தான், 1983 இன் கறுப்பு ஜூலையாகும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னைய அந்த ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தில், ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள், ஈவிரக்கமின்றி வெட்டிக் கொல்லப்பட்டார்கள் - தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். கோடிக்கணக்கில் தமிழர்களின் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. சிறைச்சாலைகளுக்குள்ளும் அரசியல் கோரக் கொலைகள் நடத்தப்பட்டன. குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழ் இளைஞர்களை சிங்களக் குண்டர்கள் கொத்திக் குதறிக் கொன்றார்கள். ஒரு பயங்கரவாத அரசாங்கத்தின் சகல சக்திகளும் ஒருமுகப்படுத்தப்பட்டு, தமிழினத்தின் மீது கோரத்தாண்டவம் ஆடின.



இனக்கலவரங்கள் தமிழ் மக்களுக்குப் புதிதான ஒன்றல்ல! 1956, 1958, 1974, 1977 என்று மாறி மாறிவந்த சிங்கள அரசுகளால், பல தடவைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழினப் படுகொலைகளின் உச்சக்கட்ட வெளிப்பாடுதான் 83 கறுப்பு ஜூலை.

நாசத்தையும் - அழிவையும் தமிழ் மக்களுக்குத் தந்திட்ட இந்தக் கறுப்பு ஜூலை, இன்னொரு விதத்தில் சிலருக்கு நன்மைகளையும் தந்தது என்பதும் உண்மைதான். ஆம். இலங்கைத் தீவில் தமிழருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தால், புலம்பெயர்ந்தோருக்கு, அமைதியான வாழ்க்கையை அமைத்திடுவதற்கு உலக நாடுகள் பல அனுதாபத்துடன் அனுமதி அளித்ததற்கும், இரத்தம் தோய்ந்த இந்தக் கறுப்பு ஜூலை காரணமாக அமைந்தது. அத்துடன், பயம் களைந்து, பட்டது போதும் என்று துணிந்தெழுந்து, விடுதலைக்காக, ஈழத் தமிழினம் போர் எழுச்சிகொண்டு, மகத்தான தலைமையொன்றின் கீழ் தன்னை அணிவகுத்துக்கொண்டதற்கும், கறுப்பு ஜூலை ஒரு காரணமாக அமைந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, நாகரிக உலகம் அதிர்ச்சி கொள்ளக்கூடிய வகையில் நடைபெற்ற தமிழினப் படுகொலைகள், பின்னர் ஓய்ந்தனவா என்று கேட்டால், அதற்குரிய பதில், மிகக் கசப்பானதாகத்தான் இருக்கும். ஆம். "ஜூலை 83 ஒரு தூக்குச் சமன்" என்கின்ற விதத்தில், தமிழர்கள் நாளாந்தம் படுகொலை செய்யப்பட்டதும், கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனதும், தமிழினப் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டதும், செம்மணி போன்ற மனிதப் புதைகுழிகளில், பெயர் தெரியாமல் உறங்கிப் போனதும் தொடர்ந்தும் நடைபெற்றன.

ஜூலை 83 இல், இலங்கைத் தீவின் பல இடங்களில் இருந்தும் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டபோது, தன் தனயர்களைக் கை நீட்டி வரவேற்றுக் கட்டித்தழுவியது யாழ்.குடாநாடு! ஆனால், அதே யாழ்.குடாநாடு, இரவோடிரவாக, ஒரே நாளில், தன் மண்ணின் மைந்தர்கள் - ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், சிங்கள அரச பயங்கரவாதம் காரணமாக, அகதிகளாக - அல்லற்பட்டு இடம் பெயர்ந்ததையும், பின்னாளில் கண்டு கதறியது!

வாழையடி வாழையாக வாழ்ந்தவர்கள், வந்தாரை வாழவைத்தவர்கள், சொந்த நாட்டிலேயே சுகம் இழந்து, சுற்றம் இழந்து, சோகத்தில், வீதியோரங்களில், மர நிழல்களில், காடுகளில் வாழ வேண்டிய வேளையும் வந்தது. சிறிலங்கா அரச பயங்கரவாதம் காரணமாக, தினமும் செத்துப் பிழைத்த அந்த உயிர்களுக்கு, ஜூலை 83 ஒரு தூசு அல்லவா?

மீண்டும் தொடர்ந்து வித்தியாசமான விதத்தில் - வேற்று வடிவங்களில், தினம் தினம் ஈழத் தமிழினத்தை அழிப்பதற்கு ஜூலை 83 தொடர்ந்தும் செயற்பட்டது. ஆனால், அதற்கு அப்போது வேறு பெயர்கள் இடப்பட்டன. சிறிலங்கா அரசுகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் உண்மையான பெயர் - ஜூலை 83! உணவுத்தடை - அதன் மறுபெயர் ஜூலை 83! மருந்து மற்றும் அத்தியாவசிப் பொருட்களின் தடை - அதன் சரியான பெயர் ஜூலை 83! மனித உரிமை மீறல்கள் - அதன் காரணப் பெயர் - ஜூலை 83! காணாமற்போனோரின் கதை - அதன் உட்பெயர் - ஜூலை 83! கிருஷாந்தி போன்றோரின் கண்ணீர்க் கதறல்கள் - அதே கறுப்பு ஜூலை! “சமாதானத்திற்கான போர்” என்ற கோஷம் - அதுவும் கறுப்பு ஜூலையின் இன்னுமொரு வடிவம்!

83 இன் கறுப்பு ஜூலை மட்டும்தான் எமக்கு ஞாபகத்தில் இருக்கின்றதா? தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் தமிழீழத்தில், சிறிலங்கா அரசுகளால் நடத்தப்பட்ட அக்கிரமங்கள், அட்டூழியங்கள், அநியாயங்கள், அராஜகங்கள் யாவும், மறந்து போகுமா என்ன?

ஜூலை 1983 தொடக்கம் ஜூலை 2003 வரையான நீண்ட இருபது ஆண்டுகள்! இந்த இருபது ஆண்டுகள் எமக்குக் காட்டி நிற்கும் உண்மைகள் என்ன? யதார்த்தநிலை என்ன?

கடந்த இருபது ஆண்டுகளில், பதவிக்கு வந்து ஆட்சி செய்த சகல சிங்கள அரசுகளும், தமிழினத்தின் மீது, இராணுவ அடக்குமுறையையும், போரையுமே பிரயோகித்து வந்துள்ளன.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற ஒரு மகத்தான விடுதலை இயகத்தின் சுதந்திரப் போராட்டம் காரணமாக, இன்று தமிழினம் தலைவணங்காது, தலை நிமிர்ந்து நிற்கின்றது. இயகத்தின் இராணுவ வெற்றிகளும், இராணுவப் பலமும், இன்றைய சிங்கள அரசை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இட்டுவந்திருக்கின்றது. இருபுறமும் இருக்கும் ‘இராணுவச் சமபல நிலை’ - இன்று பல மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால், முக்கியமான மாற்றங்களுக்கு சிங்கள அரசு - இன்றைய சிறிலங்கா அரசு - தயாராக இருக்கின்றதா என்ற வினாவிற்கு உரிய விடையை நாம் இந்த வேளையில் தேடி நிற்கின்றோம்!

சிங்கள - பௌத்த பேரினவாதத்தைத் தமிழினம் மீது பிரயோகிப்பதற்கு உதவுகின்ற - உதவிவருகின்ற ஒரு சக்தி மட்டும், கடந்த இருபது ஆண்டு காலத்தில் இன்னும் மாறாமல் இருப்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. சிங்கள பௌத்த பேரினவாதத்தை இறுக்கமாகக் கட்டிக்காத்து, தமிழினத்தின் உரிமைகளை நசுக்கி, சிங்கள தேசத்தின் மேலாண்மையை உறுதிப்படுத்தி வருகின்றது இந்த சக்தி. அது வேறேதும் இல்லை. சிறிலங்காவின் அரசியல் யாப்புத்தான் அது.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு! தமிழரின் உரிமைக்கு வைக்கப்படும் ஆப்பு ஆகும்!

கடந்த இருபது ஆண்டு காலத்தில், தமிழருக்கு எதிரான வன்முறைகள் வெளிப்படையாக நடைபெற்றன. ஆனால், கடந்த முப்பது ஆண்டு காலமாக, சிறிலங்காவின் அரசியல் யாப்பு, தமிழினத்தை மறைமுகமாக அழுத்தியே வந்துள்ளது. சிறிலங்காவின் இந்த அரசியல் யாப்பை எதிர்த்துத்தான், தமிழரின் அன்றைய போராட்டங்களும் நடைபெற்றன.

சிங்கள - பௌத்த மேலாண்மையை உறுதிப்படுத்துகின்ற இந்த அரசியல் யாப்பினை மாற்றுவதற்குரிய - எந்தவொரு உருப்படியான முயற்சியையும், கடந்த கால அரசுகள் செய்யவில்லை என்பதையும், இவ்வேளையில் சுட்டிக்காட்டத்தக்கது. இன்று, தமிழ்மக்கள் மீது சிங்கள அரசுகள் தொடுத்த போரின் விளைவாக, சிங்களத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து போயிற்று. சிங்களத்தின் முப்படைகளும் இப்போரினை வெல்லமுடியாமல், தமக்கு எதிரான ஓர் இராணுவ சக்தியை உணர்ந்துள்ளன. ஆனால், இந்த அரசியல் யாப்பு மட்டும், இன்றுவரை தனது வலுவை இழக்காமல், மௌனப் புன்னகையோடு இருக்கின்றது.

இன்று தமிழ்மக்களுக்கு ஓர் உருப்படியான இடைக்கால நிர்வாகத்ததைத் தருவதற்கும், இந்த அரசியல் யாப்பே இடைஞ்சலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஓர் இடைக்காலத்திற்குரிய நிர்வாகத்ததைத் தருவதற்கே, இந்த அரசியல் யாப்பு தடையாக இருக்குமென்றால், தமிழினத்தின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்த அரசியல் யாப்பு எத்துணைப் பெரிய தடையாக இருக்கப்போகின்றது?

சிறிலங்காவின் அரசியல் யாப்பு, ஓர் அநீதியான யாப்பு என்பதை நாம் மட்டுமல்ல, பல உலக ஆணைக்குழுக்களும் தெரிவித்தே வந்துள்ளன. உதாரணத்திற்கு, இருபது ஆண்டுகளுக்கு முன்பு - 1983 ஆம் ஆண்டில் அன்றைய சிறிலங்கா அரசு, ஆறாவது சட்ட திருத்தத்தைக் கொண்டுவந்தது. அதன்படி, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டவர்கள்தான், நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து, அங்கத்தவர்களாக முடியும். இந்த ஆறாவது சட்டத்திருத்தம் குறித்து, **International Commission of Jurists**, தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

அது இவ்வாறு கூறியிருந்தது.

“அரசியல் கருத்துக்களைச் சுதந்திரமாக விளக்குவதும், அதனை நாடாளுமன்றத்தில் நிலைப்படுத்துவதும், அவை குறித்து உழைப்பதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளாகும். இது **International Convenant Of Civil Political Rights** இன் 25 ஆவது அங்கமாக விளங்குகின்றது. இதன்படி, தமிழீழக் கோரிக்கையைத் தடைசெய்வதற்கு, ஆறாவது சட்ட திருத்தத்தைச் சிறிலங்கா அரசு உபயோகித்திருப்பதானது, ஒரு வெளிப்படையான உலக சட்ட மீறலாகும்”.





இவ்வாறு, சிறிலங்காவின் ஆறாவது சட்டதிருத்தம் குறித்து **International Commission of Jurists** கண்டித்து அறிக்கை வெளியிட்டது. அது மட்டுமல்லாது, சிறிலங்காவின் 13 ஆவது சட்ட திருத்தமும், தமிழ் மக்களுக்கு சுயாட்சி கிடைப்பதற்குத் தடையாக விளங்குகின்றது.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு மட்டுமல்ல, காலத்திற்குக் காலம், அதில் ஏற்படுத்தப்பட்ட சட்ட திருத்தங்களும், தமிழினத்திற்கு எதிராகவே இயற்றப்பட்டவைதான்.

இதனை வைத்துக்கொண்டு, இதனூடே, தமிழர்களின் நாளாந்தப் பிரச்சினைகளும், தேசியப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று நம்புவது, மோசத்தைத்தான் கொண்டுவரும்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு ஓர் அநீதியான யாப்பு ஆகையால், அதனூடே ஓர் நீதியான தீர்ப்பு வரும் என்று எதிர்பார்ப்பது மடமைத்தனமாகும்!

அநீதியை அடிப்படையாகக் கொண்டுள்ள விடயத்தை வைத்துக்கொண்டு, அதற்கு மேலே உறுதியான கட்டடத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

ஆகவே, சிறிலங்காவின் அரசியல் சட்ட அமைப்பு முழுமையாக மாற்றப்பட வேண்டும். அது முழுமையாக மாற்றப்படாத பட்சத்தில், எதிர்காலப் பேச்சு வார்த்தைகள் எந்தவிதமான பயனையும் தரமாட்டாது என்பதே உண்மையாகும். அது கசக்கின்ற உண்மை!

மெல்போர்னிலிருந்து
சபேசன்

“தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசால் தரமுடியாத விடயங்களைக் கேட்டு நிற்கின்றார்கள்” என்றும்- “தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள், சிறிலங்காவின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பானவை” என்றும் “அதனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இவை கிடைக்காது” என்றும் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றார்கள். இது மிகத் தவறான கருத்தாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள், சிறிலங்கா அரசின் அரசியல் யாப்பிற்கு அமைவானதா? என்பதல்ல இங்கு கேள்வி! தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நீதியானவையா - நியாயமானவையா என்பதுதான் இங்கு கேள்வி!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நீதியானவையென்றால், அவை நியாயமானவையென்றால், அவை மூலம் தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளும், அவசியப் பிரச்சினைகளும், அரசியல் வேட்கையும் தீர்க்கப்படுமென்றால், அவற்றை நிறைவேற்றுவதே மிகச்சரியான செயலாகும்.

அதுவே, ஜனநாயக ரீதியில், எமது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய நடவடிக்கையுமாகும்.

இதனைச் செய்வதற்கு - சிறிலங்கா அரசு எந்தவிதமான உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்காவிட்டால், இத்தகைய ஜனநாயக அணுகுமுறையும், பேச்சுவார்த்தைகளும் வெறும் ஏமாற்று வித்தைகள்தான் என்ற ஐயம் எழுவதைத் தடைசெய்ய முடியாது.

கறுப்பு ஜூலை இனக் கலவரங்கள் ஆரம்பமாகி இருபது ஆண்டுகளாகின்ற இவ்வேளையில், அரசியல் ரீதியாக எந்த ஒரு தீர்வும் தமிழ் மக்களுக்குக் கிட்டவில்லை என்பதையும், இந்த இருபது ஆண்டுகளில் எந்த ஒரு சிங்கள அரசும் அரசியல் ரீதியான தீர்வைத் தன்னிச்சையாகத் தருவதற்கு முயலவில்லை என்பதையும், உலகநாடுகள் உணரவேண்டும். இப்போது நடைபெறுகின்ற அல்லது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் இதுவரை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே பேசப்பட்டன என்பதையும், அதனைக் கூட நடைமுறைப்படுத்த முடியாதவாறு சிறிலங்காவின் அரசியல் சட்டம் இருப்பதையும் இந்த உலக நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, ஜனநாயக ரீதியில் நியாயமான சமாதானத் தீர்வு ஒன்று கிடைப்பதை இந்த உலகநாடுகள் உண்மையாகவே விரும்புகின்றனவென்றால், அவை செய்யவேண்டிய தலையாய உதவி ஒன்றுள்ளது.

சிறிலங்காவின் தற்போதைய அநீதியான அரசியல் சட்டயாப்பு, ஒரு நீதியான அரசியல்யாப்பாக முழுமையாக மாற்றம் செய்யப்படவேண்டிய நடவடிக்கைகளை - அதற்குரிய அழுத்தங்களை இந்த உலக நாடுகள் எடுக்கவேண்டும்.

அதற்குரிய களம், கொழும்பே தவிர, வன்னி அல்ல! ☆



ஆர்ஜன்ரீனாவில் இதயம், நுரையீரல் என்பவை ஒட்டிப்பிறந்த இரட்டைச் சிறுவர்கள் இவர்கள். இவர்கள் கடந்த வியாழக்கிழமையன்று வைத்தியசாலையில் சில மணிநேரமே வாழ்ந்து - பின்னர் மரணித்தனர்.

## ஆப்கானில் அமெரிக்கா கைதுசெய்த

# பிரிட்டிஷ் பிரஜைகளை விடுவிக்குமாறு பிரதமர் ரொனி பிளேயர் மீது அழுத்தம்!

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில், தலிபான்களுடன் இணைந்து செயற்பட்டதற்காக, இரண்டு பிரிட்டிஷ் பிரஜைகளை - அமெரிக்க இராணுவம் கைதுசெய்து குவாண்டனா மோ குடாவிலுள்ள இரகசிய தடுப்பு முகாமில் தடுத்துவைத்துள்ளதைக் கண்டித்து, பிரிட்டிஷ் பிரதமர் பிளேயருக்கு எதிராக, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் பிரிட்டிஷ் பிரஜைகளை விடுவிப்பது தொடர்பாக, பிளேயர் - அமெரிக்க ஜனாதிபதியுடன் பேசி, நல்லதோர் முடிவைத் தரவேண்டும் என்ற அழுத்தம், பிரிட்டிஷ் நாடாளுமன்றிலும் அதற்கு வெளியிலும் பிளேயருக்கு எதிராகக் காணப்படுகின்றது.

பேராஸ்வொஸி, மோசாம்பேக் என்ற இந்த இரு முஸ்லிம் பிரிட்டிஷ் பிரஜைகளும், பிரிட்டனிலேயே விசாரிக்கப்படவேண்டும் என 200 பிரிட்டிஷ் எம்.பிக்கள் தமது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளனர். அடுத்த வாரம் பிரதமர் பிளேயர், அமெரிக்க ஜனாதிபதியுடன் இதுதொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஈராக் மீது பொய்க்காரணங்கள் கூறிப் படையெடுத்ததாக, ரொனி பிளேயர் மீதான குற்றச்சாட்டுக்கள், பிரிட்டனில் அதிகரித்துவரும் இச்சமயம், இந்த விவகாரமும் பெரும் சவாலாக அவருக்கு மாறியுள்ளது.



அமெரிக்கா தடுத்துவைத்துள்ள இரு பிரிட்டிஷ் பிரஜைகள்.

# பாகிஸ்தான் குண்டுவெடிப்பு இருவர் பலி; 7 பேர் காயம்!



(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் - அலுவலகம் ஒன்றில் நடந்த குண்டுவெடிப்பில், இருவர் பலியாகினர். 7 பேர் காயமடைந்தனர். விமானநிலைய வீதியிலுள்ள 12 மாடிக் கட்டடமான கிரவுண் பிளாஸாக் கட்டடத்தில், சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. கட்டடத்தின் பாதுகாப்பு ஊழியரும் வழிப்போக்கர் ஒருவருமே குண்டுவெடிப்பில் சிக்கிப் பலியாகினர்.

இரண்டு கிலோ நிறையுடைய இக்குண்டு, ரிமோட் கொன்ரோல் கருவிமூலம் இயக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



# ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படை சில ஆண்டுகள் தங்கியிருக்கும்!

## அமெரிக்கத் தளபதி ஜெனரல் பிராங்

ஈராக்கில், அமெரிக்க இராணுவம் இரண்டு முதல் நான்கு வருடங்கள் தங்கியிருக்கவேண்டியிருக்கும் என, ஈராக்கிலுள்ள அமெரிக்க கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் ரொமி பிராங் தெரிவித்துள்ளார்.

வொஷிங்ரனில் கொங்கிரஸ்ஸில் பேசிய ஜெனரல் பிராங், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரின் 1,50,000 என்ற பலம், இப்போதைக்குக் குறைக்கப்படமாட்டாது என அமெரிக்கத் தலைமைப்பீடம் முடிவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்போது அங்கு நடைபெறும் வீச்சுக்குறைந்த போரில் இதுவரை



65 படையினர் பலியாகியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தினமும் 10 முதல் 25 வரையிலான தாக்குதல்கள் அமெரிக்கப் படைகள்மீது நடக்கிறது எனவும் சுட்டிக்காட்டினார்.

## சிங்கப்பூர் சத்திரசிகிச்சையில் மரணித்த

# சகோதரிகள் சடலங்கள் சொந்த நகரில் புதைப்பு!



(தெஹ்ரான்)

சத்திரசிகிச்சையின்போது கடந்த செவ்வாயன்று மரணமடைந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளின் சடலங்கள் நேற்று அவர்களின் சொந்த நகரில் புதைக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் சிங்கப்பூரிலிருந்து ஈரான் எடுத்துவரப்பட்ட இருவரினதும் சடலங்கள் நேற்று தெஹ்ரான் பெரிய பள்ளிவாசலுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. அங்கு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து சடலங்கள் பார்ஸ் மாகாணத்திலுள்ள பிரோசோபாத்துக்குக் கொண்டுவரப்பட்டு அவர்களது சொந்த நகரில் புதைக்கப்பட்டன.

அவர்கள் ஒன்றாக இணைந்திருந்து களைத்துவிட்டனர். எனினும் அவர்கள் கனவு கண்டது போல தனித்தனியாகப் பிரிந்துவிட்டனர். இதற்காக அவர்கள் உயிரையும் கொடுத்துள்ளனர் என்றார் இறந்தவரின் நெருங்கிய நண்பரான நூஷின் மெஹ்ரான்.

தலை ஒட்டிப் பிறந்த இந்த 29 வயது ஈரானிய யுவதிகள் சிங்கப்பூரில் நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின்னர் 90 நிமிடங்கள் கழித்து உயிரிழந்தனர். இவர்களின் சத்திர சிகிச்சையை நேரடியாகத் தனது தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய ஈரான் அரசு இவர்களைக் கௌரவிக்குமுகமாக அடுத்த வாரத்தைத் துக்கவாரமாகப் பிரகடனம் செய்துள்ளது.

# இந்திய - பாகிஸ்தானுக்கான நேரடி பஸ் சேவை ஆரம்பம்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நேரடி பஸ் சேவை மீண்டும் 18 மாதங்களுக்குப் பின்னர் நேற்று ஆரம்பமாகியது. முதல் பஸ், டெல்கியிலிருந்து லாகூருக்கு நேற்றுக் காலை புறப்பட்டது.

முன்னதாக இந்தியப் நாடாளுமன்றம் மீதான காஷ்மீர் போராளிகளின் தாக்குதலால் 2001 டிசம்பரில் இந்த நேரடி பஸ்சேவை ரத்துச்செய்யப்பட்டிருந்தது. பின்னர், மீண்டும் நேரடி பஸ்சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அணு ஆயுத வல்லமைகொண்ட இந்த நாடுகளிடையே சமாதான முயற்சியின் முதல் சமிக்ஞையாக இது உள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

12 மணிநேர பயணத்தைக் கொண்ட இந்த பஸ்சேவையில் நேற்றுப் புறப்பட்ட முதல் பஸ்ஸில், 30 பயணிகள் சென்றனர். இரண்டாவது பஸ் நேற்று மதியம் புறப்பட்டது. இந்த இரண்டு சொகுசு பஸ்களிலும் தொலைக்காட்சி, தொலைபேசி வசதிகள் உள்ளன. பஸ்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பயணிகளின் பொதிகளும் தீவிரமாகச் சோதிக்கப்பட்டன.



# அமெரிக்கப் படை சூட்டில் இரு ஈராக்கியர் படுகாயம்!

(பக்தாத்)

பக்தாத் விமான நிலையமருகே, அமெரிக்க ரோந்து அணிமீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலைத் தொடர்ந்து - இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில், இரு ஈராக்கியப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சம்பவத்தில், துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் பொதுமக்கள் சென்ற கார் ஒன்று சிக்கியதாகவும், காரிலிருந்த ஒருவர் - கழுத்திலும், மற்றையவர் வயிற்றிலும் காயமடைந்ததாகவும், அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். காயமடைந்தவர்களின் நிலைமை குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஈராக்கில், அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவது தெரிந்ததே.



தொடர்ச்சியாக இரவிரவாகப் பெய்த கடும் பருவமழையினால் வெள்ளம் நிரம்பியிருக்கும் புதுடெல்கி வீதியொன்று.

உலகவலம்

# டயானா ஞாபகார்த்த நிதி; மோசடியால் முடக்கம்!

காலஞ்சென்ற வேல்ஸ் இளவரசி டயானாவின் ஞாபகார்த்த நிதியத்தின் நிதிகள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. நிதிமோசடிகள் தொடர்பான வழக்கு ஒன்றைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டயானாவின் பெயர் கெட்டதைப்போல், அவரின் பெயரால் நடந்த மனிதாபிமானப் பணிகளும் கெட்ட பெயரைப் பெற்றுள்ளது என, ஞாபகார்த்த நிதியத்தின் தலைவர் கலாநிதி அன்றூ புர்கிஸ் கூறினார்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

ORIFLAME
இயற்கை அழகு சாதனப் பொருட்கள்

விற்பனை ஆலோசனை தொடர்புகளுக்கு:
73, செம்மணி வீதி. நாயன்மார்கட்டு,
நல்லூர்.
ஆண், பெண் இருபாலாரும்
உபயோகிக்கக்கூடியது.
T.P : 071-2370449 (சி-1232)

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு

# கூட்டமைப்பு நாடாளுமன்றில் கண்டன அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகளால், பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியமைக்கு - தமது கடுமையான ஆட்சேபனையையும், கண்டனத்தையும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் நேற்றுத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்று, கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இநதக் கண்டன அறிக்கையை சபையில் வாசித்தார். இப்படியான செயலில் தாம் ஒருபோதும் ஈடுபடவில்லை என்றும், ஜனாதிபதியின் இந்தக் கூற்றில் எதுவித உண்மையுமில்லை என்றும், இந்த விடயம் குறித்து ஜனாதிபதி பதிலளிக்கவேண்டும் என்றும், ஜனாதிபதி கூறுவது உண்மையானால் - எமது சாரதிகள் புலிகள்தான் என்பதை அவர் அடையாளம்காட்டி, உறுதிப்படுத்த முடியுமா? என்றும் - அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை- ஜனாதிபதியின் இந்தகூற்று சிங்கள -பௌத்த பேரினவாத சக்திகளை ஊக்கமடையச் செய்யும் என்றும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது வெறுப்புணர்வைத் தூண்டும் என்றும்- இதன்மூலம் அந்தச் சக்திகள், தம்மீது உயிராபத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்வதற்கு வழியேற்படுத்தும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



மட்டு. அம்பிளாந்துறை படகுத்துறை ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லும் பயணிகள் மீது, தொடர்ந்து இடம்பெறும் சோதனை கெடுபிடியின் ஒரு கட்டமாக - படையினரின் சோதனைக்காக மக்கள் காத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# அரச அதிபர்களின் அனுமதியுடன் எரிபொருள் எடுத்துச் செல்லலாம்!

வடக்கிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு, எரிபொருட்களை எடுத்துச் செல்வதற்கு புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இதுவரை காலமும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு எரிபொருட்களை அனுப்புவதற்கு, வவுனியா அரசாங்க அதிபரே பொறுப்பாக இருந்தார்.

இனிமேல் - வவுனியா, மண்டூர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்களே பொறுப்பாக இருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி - இனிமேல் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களின் அனுமதியின்றி, எரிபொருட்கள் - ஓமந்தை, முகமாலை, உயிலங்குளம் ஆகிய சோதனைச் சாவடிகள் ஊடாக எடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாகாண விளையாட்டுப் போட்டி; யாழ். நகரில் இன்று ஆரம்பம்!

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு போட்டி, மிக விமரிசையாக இன்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

இன்றும், நாளையும் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிக்கு, யாழ்ப்பாணம் உட்பட 8 மாவட்டங்களைச் சேர்ந்த 600 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கு கொள்ளவுள்ளனர்.

கல்வி அமைச்சின் பணிப்பாளர் தியாகலிங்கம் தலைமையில், இந்த விளையாட்டு விழாவினை - யாழ். மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆரம்பித்துவைக்க, பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் பத்மநாதன் கலந்துகொள்வார்.

### பளுகாமத்தில் மின்னல் தாக்கி இளம் தாய் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டு. பளுகாமத்தில் கடந்த புதன்கிழமை இரவு மின்னல் தாக்கியதில், ஒருவயதுக் குழந்தைக்கு பாலூட்டிக்கொண்டிருந்த இளந்தாய் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

மட்டக்களப்பு - கூளாவடியைச் சேர்ந்த பொன்னர் ரதி (வயது 35) என்பவரே மின்னல் தாக்கியதில் உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவத்தில் குழந்தை தெய்வாதீனமாக உயிர்தப்பியமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்காலத் திட்ட வரைபு நாடாளுமன்றில் வெளியாகும்

## அமைச்சர் லொக்கு பண்டார

(கொழும்பு)

அரசின் இடைக்கால நிர்வாக அலகிற்கான திட்டவரைபு குறித்த விபரங்கள், நாடாளுமன்றத்தில் வெளியிடப்படுவதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படுமென, சபை முதல்வர் அமைச்சர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். திட்டவரைபு விபரங்கள் ஜனாதிபதிக்கும் தெரியப்படுதப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான விவரங்கள், நேற்று முன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் விளக்கிய போது, சபையில் எவரும் இருக்கவில்லை என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

### குரங்குப்பாஞ்சான்...

காணிப்புக் குழுவிடம் அவகாசம் கேட்டுள்ளனர். இதற்கு கண்காணிப்புக் குழுவும் இணங்கியுள்ளது என்றும், கோபாலபுரம் பகுதியிலுள்ள கடற்படை முகாமை நீக்குமாறு புலிகள் கோருவது தவறு என்றும்- ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# பேச்சுக்களை மீண்டும்...

பேச்சளவுக்கு மட்டும், இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற பெயரில் இத்திட்டவரைபு விடுதலைப் புலிகளுக்கு அரசால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இத்திட்ட வரைபைச் சமர்ப்பிப்பதன்மூலம், விடுதலைப் புலிகளுடன் மீண்டும் கலந்துடையாடல்களை ஏற்படுத்துவதற்கு, அரசு சந்தர்ப்பத்தை உருவாக்கவுள்ளது. இவ்வாறு- சந்தர்ப்பம் உருவாகும் சமயத்தில், வட - கிழக்குப் பகுதிகளில் மாகாண அரசு அமைக்கப்படுவது குறித்தும், கலந்துரையாடுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

மாகாண அரசு அமைக்கப்பட்டால், அது அரசியல் யாப்புக்கு உட்பட்டதாகச் செயற்படும். இதனால் - அரசுக்கு, அரசியல் யாப்புத் தொடர்பான சட்டச்சிக்கல்கள் எதுவும் ஏற்படமாட்டாது என்றும் அரசு கருதுவதாக, கொழும்பிலுள்ள அரசுக்கு மிக நெருங்கிய சட்டவியல் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

### தொடர்ந்து...

நிகழ்வு ஒன்றிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நிதி அமைச்சு, நாட்டின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது எடுக்கும் தீர்மானங்களால், தமது அமைச்சு பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியதாகவும், இதனாலே- தமது அமைச்சர் பதவியைத் துறக்க முன்வந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

## பிந்துனுவெவ கொலைவழக்கில்

# குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சிஹல உறுமய நிதி வழங்கும்!

பிந்துனுவெவ கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, சட்ட ஆலோசனைகள் வழங்கும் பொருட்டு நிதி ஒன்றைத் திரட்டுவதற்கு சிஹல உறுமய தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, சட்டத்தரணிகள் இவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கோரப்படவுள்ளனர் என சிஹல உறுமய அறிவித்துள்ளது.

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் வைத்து தமிழ் இளைஞர்கள் பலர் கொடூரமான முறையில் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட வழக்கில், எதிரிகளான ஐவருக்கு மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

# காணாமற்போனோர் குறித்து இன்று ஆறாம் கட்ட விசாரணை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக் குழுவினர், தமது ஆறாம் கட்ட விசாரணையை இன்று யாழ்பாணத்தில் நடத்தவுள்ளனர்.

வட பகுதியில் கடந்த காலங்களில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்களை கண்டுபிடித்தல் அல்லது அவர்களின் உண்மைநிலையயை அறிந்து கொள்ளும் நோக்குடன் - மனித உரிமை ஆணைக்குழுவினரால் நியமிக்கப்பட்ட, முன்னாள் அரசாங்க அதிபர் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான விசாரணைக்குழுவினர், தமது விசாரணையின் தொடர்ச்சியாகவே இன்றைய விசாரணைகளை நடாத்தவுள்ளனர். (ரா)

# அமெரிக்காவின் தேவைக்கே இலங்கையின் பாதுகாப்பு

## ஜே.வி.பி குற்றஞ்சாட்டுகிறது

நாட்டின் தேசிய பாதுகாப்பு - நோர்வேயினதும், அமெரிக்காவினதும் தேவைக்கு ஏற்ப நெறிப்படுத்தப்படுகின்றது. இதனால், வடக்கில் தமிழ்க்கட்சியினரும், தெற்கில் பொ. ஐ.முவினரும், படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கு அரசாங்கம் இடமளித்து வருகின்றது என்று, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டை, வெளிநாட்டவர்களுக்குத் தாரைவார்த்துவிடவே அதிக ஆர்வம் காட்டுகின்றது. ஆனால் - நாம் அதனை அனுமதிக்கமுடியாது என்றும், விமல் வீரவன்ச அப்போது மேலும் கூறினார்.

### புலிகளின் ஆதரவாளர்...

டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பொலிஸார் இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சென்று, விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கொலைச்சம்பவம் மட்டக்களப்பு விமானப்படையின் பாதுகாப்பு வலயத்திற்குள் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவில் பொதுமக்கள் மீது...

கள் மூவரும் விலகிச்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்னிரவு - நடைபெற்ற இந்தச் சம்பவம் காரணமாக, ஆலயச் சூழலில் நேற்று நள்ளிரவு கடந்தும் பதற்றம் நிலவியது.

இன்று நடைபெறவிருக்கும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவையொட்டி, ஆலயச் சூழலில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று நடந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் -

ஆலயத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால், விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றைக் கூறும் விடியோப் படக்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அங்கு பொதுமக்கள் திரண்டிருந்து அந்தப் படக்காட்சியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தச்சமயம் அப்பகுதிக்கு வந்த கடற்படை அணியொன்று, திடீரென வந்து சேர்ந்தது. அவர்கள் படக்காட்சியை நிறுத்துமாறு தடுத்ததுடன், அப்படக்காட்சிக்குப் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியையும், விடியோ ஒளிப்பதிவு நாடாக்களையும், ஏனைய உபகரணங்களையும் பறித்தெடுத்துச் செல்ல முற்பட்டதோடு, அங்கு நின்ற போராளிகளையும் சுற்றிவளைக்க முயன்றனர்.

அந்தச் சமயத்தில், அதை அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் தடுத்து நிறுத்த முற்பட்ட சமயம் முறுகல் நிலை முற்றியது.

இதன்போது- அங்கு திரண்டு நின்ற பொதுமக்களை விரட்டியடிக்கும் நோக்குடன், கடற்படையினர் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் டெக் என்பவற்றையும் அடித்து நொருக்கினர்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1528 திகதி: 11.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | 8 | 1 | 2 | 4 | 1 | 2 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.